Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 16 புதன்கிழமை (28-02-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:93

### பரீட்சை முடிவுகளின் அடிப்படையில்

## ஜப்பான் செல்லும் மாணவர் பாரபட்சம் இன்றியே தெரிவு

### விதிமுறைகளை விளக்குகிறார் அதிகாரி

கொழும்பு,பெப்.28

"ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஜப்பானுக்குச் கற்றுலாச் செல்ல வாய்ப்பளித்ததில் முறைகேடுகள் நடந்ததாகச் சில பத்திரிகைகளில் வெளியான செய்திகள் தவறானவை. இந்த ஜப்பான் கற்றுலாத் திட்டம் பற்றிய சரியான தகவல்களை - விதிமுறைகளை - அறிந்துகொள்ளாமையே இத்தகைய செய்திகளுக்குக் காரணம். இந்தத் தெரிவு விடயத்தில் பாகுபாடோ முறைகேடுகளோ இடம்பெறவில்லை."

- இவ்வாறு விளக்கமளித்திருக்கிறார் கல்வி, உயர்கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர்.

யாழ்.மாவட்டத்தில் உயர்புள்ளி பெற்ற மாணவர் ஒருவர் இருக்க

(13ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய விமானப்படை சாகஸக் குழு இலங்கை வருகை

கொழும்பு,பெப்.28

அடுத்த மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள இலங்கை விமானப் படையின் பொன்விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்காக இந்திய விமானப்படையின் சாகஸக் குழுவொன்று கொழும்பு வந்துள்ளது.

அடுத்த மாதம் 9 ஆம் திகதி இரத்மலானை விமானத்தளத்தில் நடைபெறவுள்ள நிகழ்வுகளில் 'சூரியக் கிரண்' என்ற இந்தச் சாகஸக்குழு கலந்துகொண்டு சாகஸங்களை நிகழ்த்தவுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் விமானப்படைத் தளபதிகளும் இந்தப் பொன்விழாக் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-10)

## ஆப்கானில் உள்ள புத்தர் சிலைகளை குண்டு வைத்துத் தகர்க்க உத்தரவு

கொழும்பு,பெப்.28

ஆப்கானிஸ்தானில் அமைந்துள்ள சகல புத்தர் சிலைகளையும் அழிக்குமாறு அந்நாட்டு ஆட்சியாளர்களான தலிபான் அமைப்பின் தலைவர் முல்லா முகமட் உமர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இஸ்லாமிய யுகத்துக்கு முற்பட்டதாகக் கருதப்படும் புராதன பௌத்த சிலைகள் உட்பட ஏனைய சிலைகள் அனைத்தையும் 'டைனமைட்' குண்டு வைத்துத் தகர்க்கும்படியும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவைக் கடுமையாகக் கண்டித்து இலங்கைத் தகவல்துறைப பணிப்பாளர் நாயகம் ஆரிய ரூபசிங்க அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

இந்தச் சிலைகள் உலக வரலாற்றின் முக்கிய சின்னங்கள் என்பதை தலிபான் தலைவர் உணர வேண்டும் என்று அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

1998 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமும தலிபான் தலைவர் இதேபோன்ற உத்தரவைப் பிறப்பித்திருந்தார். எனினும் சர்வதேச மட்டத்தில் எழும்பிய எதிர்ப்பை அடுத்து அது கைவிடப்பட்டது. (உ-3-10)

# பிரிட்டன் நாடாளுமன்றத்தில் இன்று முக்கிய அறிவிப்பு?

## பயங்கரவாத அமைப்புகளின் பட்டியல் வெளியிடுவது குறித்து

லண்டன்,பெப்ரவரி28

**பிரிட்டனில் தடைசெய்யப்படும் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலை வெளியிடுவது குறித்து, பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இன்று மிக முக்கிய அறிவிப்பு வெளியாகலாம் என்று லண்டன் அரசியல் வட்டாரங்களில் நேற்று பேசப்பட்டது.**

கடந்த ஆண்டு பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச்சட்டம் கடந்த 19 ஆம் திகதிமுதல் அங்கு நடைமுறைக்கு வந்தது தெரிந்ததே.

அந்தச் சட்டத்தின் கீழ் பிரிட்டனில் தடைசெய்யப்படும் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலை அந்த நாட்டின் உள்துறை அமைச்சர் வெளியிடவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் விமர்சனத்திற்காக அந்தப் பட்டியலை நாடாளுமன்றத்திலும் உள்துறை அமைச்சர் சமர்ப்பிக்க வேண்டும். எனினும் தாம் வெளியிடும் பட்டியலுக்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தை அவர் பெற்றுக்கொள்ள வேண்டிய

(14ஆம் பக்கம் பார்க்க)

### தூதரகம் முன் பிக்குகள் 'பிரித்' ஓத

## புலிகளைத் தடை செய்யக் கோரும் மகஜர் தூதுவரிடம் கையளிப்பு

கொழும்பு,பெப்.28

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்ய வேண்டும் என்று பிரிட்டன் அரசைக் கோரி நான்கு பிக்குகள் கொழும்பில் உள்ள அந்த நாட்டின் தூதரகம் முன்பாக 'பிரித்' ஓத, பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா மகஜர் ஒன்றை பிரிட்டிஷ் தூதரிடம் கையளித்தார்.

காலிமுகத்திடலில் அமைந்துள்ள எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க சிலைக்கு முன்பாக நேற்றுக் காலை பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா தலைமையில் கூடிய நூற்றுக்கு மேற்பட்டவர்கள் அங்கு முதலில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

விடுதலைப் புலிகளைப் பிரிட்டன் தடைசெய்ய வேண்டும் என்று அவர்கள் கோசமிட்டனர்.

அதன் பின்னர் மேர்வின் சில்வா தலைமையில் பிரிட்டிஷ் தூதரகத்துக்கு பத்துப் பேர் சென்றனர்.

தூதரக வாசலில் நான்கு பிக்குகள் 'பிரித்' ஓத பிரதி அமைச்சர் தூதரகத்துக்குள் சென்று புலிகளைத் தடைசெய்யுமாறு கோரும் மகஜரைத் தூதரிடம் கையளித்தார். (உ-3)

## விரைவில் விமானப்படைக்கு நவீன ரக விமானங்கள்

கொழும்பு,பெப்.28

அடுத்த சில மாதங்களில் நவீன ரக விமானங்களும் உபகரணங்களும் விமானப் படைக்கு வந்துசேர இருக்கின்றன என்று விமானப்படைத் தளபதி ஏயார் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி தெரிவித்தார்.

விமானப்படையின் 50 ஆவது ஆண்டு கொண்டாட்டங்களை ஒட்டி நேற்றுமுன்தினம் தாம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

விமானப்படைத் தலைமையகத்

(14ஆம் பக்கம் பார்க்க)

### நீர்கொழும்பில் மூவர் பலி

நீர்கொழும்பில் வீடொன்றில் குடிசைக் கைத்தொழிலாக இயங்கிவந்த பட்டாசுத் தொழிற்சாலை ஒன்று திடீரெனத் தீப்பற்றி வெடித்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி, அவர்களின் ஐந்து வயதுப் பெண் குழந்தை என மூவர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தின்போது பலத்த எரிகாயங்களுக்கு உள்ளான நால்வர் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-10)

### ஜனாதிபதி விளக்குவார்

கொழும்பு,பெப்.28

சமாதான முயற்சிகள் தொடர்பாகத் தற்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர்களுக்கு நாளை மறுதினம் விளக்கமளிக்கவிருக்கின்றார்.

நாளை மறுதினம் கூடும் கட்சியின் செயற்குழுவின் கூட்டத்தில் இந்தியாவில் தாம் மேற்கொண்ட பேச்சுக்கள், நோர்வேயின் முன்முயற்சிகள் மற்றும் பலதரப்பட்ட முக்கிய விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி விளக்கமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

## ஜனாதிபதி - ஆயர்கள் சந்திப்பு ஒத்திவைப்பு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் வடக்கு - கிழக்கு கத்தோலிக்க ஆயர்களுக்கும் இடையில் இன்று இடம்பெறவிருந்த சந்திப்பு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக நடைமுறைப்படுத்தும் யுத்த நிறுத்தத்துக்குப் பதிலாக அரசாங்கமும் யுத்தநிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்றும் -

நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் அரசும், விடுதலைப் புலிகளும் நேரடிப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க வேண்டும் என்றும் -

கத்தோலிக்க ஆயர்கள் இன்றைய சந்திப்பில் ஜனாதிபதியைக் கோரவிருந்தனர்.

இந்தச் சந்திப்பு ஓரிரு தினங்களில் இடம்பெறும் என்று சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் ஆயர்களுக்கு அறிவித்துள்ளார்.

அதேசமயம் - சுகவீனமடைந்திருந்த போதும் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்வதற்காக யாழ்.ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் நேற்றுக் கொழும்புக்குப் பயணமானார். (உ-3)

## படைகளை விட்டு ஓடியோருக்கு மன்னிப்பு அளிப்பதாக அறிவிப்பு

### மீண்டும் விடுக்கின்றது அரசு

படைகளை விட்டு ஓடியவர்களுக்கு மீண்டும் ஒரு தடவை மன்னிப்பு அளிக்க இலங்கை அரசு முன்வந்துள்ளது.

இத்தகையோர் எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மீண்டும் படைகளில் வந்து சேர்ந்தால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டு, அவர்கள் மீண்டும் படைகளில் அதே தரத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று பாதுகாப்பு அமைச்சு நேற்று மீண்டும் அறிவித்ததாக ரோய்ட்டர் செய்தி நிறுவனம் குறிப்பிட்டது.

சுமார் பதினையாயிரம் பேர் படைகளைவிட்டு ஓடியுள்ளதாக மதிப்பிடப்படுகிறது. இத்தகையோரை மீளவும் படைகளில் சேர்ப்பதற்காக மீண்டும் மீண்டும் இத்தகைய அறிவிப்புகள் விடுக்கப்படுகின்றன. ஆனால் அதனால் சிறிதளவு பயனே கிட்டுகிறது. நாட்டில் வன்முறைகள், குற்றங்கள் அதிகரிப்பதற்கு படைகளை விட்டு ஓடியோரே காரணம் எனக் கூறப்படுகிறது.- இப்படி ரோய்ட்டர் மேலும் தெரிவித்தது. (உ)

## பொங்கு தமிழை ஆதரித்து வட்டக்கச்சியில் பேரணி!

வவுனியா,பெப்.28

'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வுக்கு ஆதரவு தெரிவித்து வட்டக்கச்சிப் பிரதேசத்தில் உயர்தர மாணவர் ஒன்றியமும் வெகுசன அமைப்புகளும் இணைந்து பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நேற்று நடத்தியுள்ளன.

நேற்றுக் காலை 10 மணிக்கு வட்டக்கச்சிச் சந்தையிலிருந்து ஆரம்பமாகிய இந்தப் பேரணியில் மாணவர்கள், ஆசிரியர்கள், மதகுருமார்கள், பொதுமக்கள் எனப் பல்லாயி

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

உ

## மண்டபம் திறப்பு கூட்டலும் திறப்பு விழாவும்

**இன்று புதன்கிழமை - 28-02-2001 - பி.ப. 4.00 மணி**

எமது கல்வி நிலையத்தில் ஆரம்ப காலத்திலிருந்தே பலரும் போற்ற அறிவு ஆளுமையுடன் கணித பாடத்தினை உயர்தர மாணவர்கட்கு சிறப்பாகப் போதித்து எமது நிறுவனத்திற்கும் எல்லோருக்கும் மதிப்பினை நல்கி எமது இதயத்தில் அழியாப்புகழ்வுடன் அமர்ந்துள்ள:



**ஆசான் கணித மேதை**

**திருமிகு பொன்னையா வேலாயுதம்** B.Sc., (Ceylon)

அவர்கள் திடீரென மறைந்து இன்றுடன் ஓராண்டு பூர்த்தியாகின்றது. அமரரின் நினைவாக:

### "வெக்டர் வேலாயுதம்"

ஞாபகார்த்த மண்டபம் ஒன்றினை இன்று புதன்கிழமை பி.ப. 4.00 மணிக்கு எமது கல்வி நிலையத்தில் திறந்து வைக்கின்றோம்.

**அமரரின் அன்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் இவ்வைபவத்தில் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். வணக்கம்.**

**இயக்குனர்,**
*புதிய விஞ்ஞானக்கல்வி நிலையம்,*
*கன்னாதிட்டி – யாழ்ப்பாணம்.*

## ஏல விற்பனை

### திருநெல்வேலி அரசடி
### ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயம்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் எதிர்வரும் (04. 03. 2001) ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

1. தேர் அச்சு 10 அடி நீளம் 5" விட்டம் - 2
2. பட்டங்கள் 2"
3. வடம் 210 அடி நீளம், 12" (சுற்றளவு)

மேற்படி பொருள்களை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை பார்வையிடலாம். ஏலத்தில் வாங்குபவர்கள் உடன் 1/4 பணத்தைச் செலுத்திப் பொருள்களை எடுக்கும்போது முழுப் பணத்தையும் செலுத்துதல் வேண்டும். ஏழு நாள்களில் பொருள்கள் எடுக்கப்பட வேண்டும்.

சு.பசுபதி,
செயலாளர்,
திருநெல்வேலி.
(84720) *ஆலய பரிபாலன சபை.*

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்**
20 - 12 - 1961



**மறைவு**
10 - 03 - 2000

### வேலாயுதம்பிள்ளை கணபதிப்பிள்ளை

திதி: 28. 02. 2001

பாரினில் புகழ் ஓங்க மாண்புடன் வாழ்ந்த
என் அன்புத் தெய்வமே!
பாரைவிட்டுப் பறந்தோடி ஆண்டொன்று மறைந்ததையா!
ஓராண்டு என்ன ஒருஜென்மம் ஓடி
மறைந்தாலும் துயரம் ஆறாது!!
நம் இதயமதில் ஏற்றி வைத்த பாசத் தீபத்தின் ஒளிச்சுடர்கள்
என்றும் அழியாது நம் எண்ணமதில் எழுதி வைத்த எங்கள்
அன்புத் தெய்வத்தின் நினைவலைகள்!

உன் பிரிவால் கண்ணீர் சிந்தும்
**மனைவி, பிள்ளைகள், சகலர், மச்சான்மார், மச்சாள்மார், மாமா, மாமிமார்,**
வல்லிபுரம் ஒழுங்கை, பருத்தித்துறை.

தகவல்:
*பா.பாலச்சந்திரன்,*
*(மச்சான் - பிரான்ஸ்)*

(C/15493)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,பெப்.28

யாழ்.வண்ணார்பண்ணை இளைய தம்பி இந்து வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் மு.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் போட்டி நிகழ்வில் முன்னாள் பிரதேச செயலாளர் க.குணராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (க)

## சாவகச்சேரி வர்த்தகருக்கு

தென்மராட்சி,பெப்.28

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள தமது வர்த்தக நிலையங்களை இதுவரை பார்வையிட்டு உடைமைகளை மீட்காத வர்த்தகர்கள் நாளை தொடக்கம் பத்து நாள்களுக்கு நகரப் பகுதிக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது.

இதுவரை தமது வர்த்தக நிலையங்களைப் பார்வையிடாத வர்த்தகர்கள் உடனடியாகத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் அறிவித்துள்ளனர். (உ-31-117)

## பாராட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.28

தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய சமூகத்தின் ஏற்பாட்டில், கடந்த வருட ஜீ.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு நிகழ்வும் சிறந்த பெறுபேறு பெற்றவர்களுக்கான ஊக்குவிப்பு நிதி வழங்கலும் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் வித்தியாலய அதிபர் ந.அரியரத்தினம தலைமையில் வித்தியாலயப் பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறைப் பேராசிரியர் க.சின்னத்தம்பியும் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறைக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம், செல்வச்சந்நிதி ஆலய பிரதம குருவான க.பாலசுப்பிரமணிய ஐயர் ஆகியோரும் பங்குபற்றுவர். (உ-3)

## நவாலியில் தேடுதல்

வலி.தென்மேற்கு,பெப்.28

நவாலிப் பகுதி இரண்டாவது நாளாக நேற்றிரவும் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவும் அந்தப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டிருந்தன.

நவாலி மேற்கு முத்துமாரி அம்மன் ஆலய அர்ச்சகர் படையினரால் தீவிரமாக விசாரிக்கப்பட்டார்.(உ-3-185)


**ராஜா** யாழ்ப்பாணம்
கார்த்திக், திவ்யாஉன்னி மற்றும் பலர் நடிப்பில்
**கண்ணன் வருவான்**
காட்சிகள்: 10.30, 2.30 (பு.நே)
02.03.2001 முதல்
**டைட்டானிக்** (தமிழ்-ரீல்ஸ்)
(C/15311)

**லஷ்சுமி** இணுவில்
அஜித், சிம்ரன் நடித்த
**உன்னைக்கொடு என்னைத் தருவேன்**
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00 2.30 (புதிய நேரம்)
(84684)

**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜயகாந்த், தேவயானி, வாசு கபாலி நடித்த
**வல்லரசு**
(ரீல்ஸ்)
காட்சிகள்:11.00, 2.30 (புதிய நேரம்)
(C/15471)


## வர்த்தகர்கள் சாவகச்சேரிக்குச் செல்ல ஏற்பாடு

**சாவகச்சேரி நகரப் பகுதியிலுள்ள தமது வர்த்தக நிலையங்களை இதுவரை பார்வையிடச் செல்லாத வர்த்தகர்களை 01-03-2001 முதல் சாவகச்சேரிக்கு அழைத்துச்செல்ல வணிகர் மன்றத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சென்ற 15-12-2000ஆம் திகதி சென்று பார்வையிடாது திரும்பிய வர்த்தகர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பதிவுகளை மன்றில் செய்து கொள்ளவும்.**

வ.இராஜதுரை
செயலாளர்.

(84727)

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

## நன்றி நவில்கின்றோம்

**நேற்று நண்பகல் 11.30 மணியளவில் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் என்னால் தவறவிடப்பட்ட, பெறுமதி வாய்ந்த பொருள்களுடன் கூடிய கைப்பையைக் கண்டெடுத்து என்னிடம் ஒப்படைத்துதவிய காப்பாளரான திரு.ராமச்சந்திரன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.**

35, குருநகர், யாழ்ப்பாணம். (84715)
**திருமதி அ.மேரிகில்டா.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகம்மா பசுபதி

**(புலவர்தரை, அளவெட்டி)**

அளவெட்டியைச் சேர்ந்த திருமதி கனகம்மா பசுபதி நேற்று (27.02.2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் பசுபதியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கனகசபை மற்றும் கமலாதேவி (கொழும்பு), யோகநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தம்பிஐயா மற்றும் திருமதி நாகபூசணி யோகநாதன் ஆகியோரின் மாமியாரும் மனோகரன் (ஜேர்மனி), மகேஸ்வரன் (கனடா), சத்தியதேவி (கொழும்பு), சகுந்தலா (இத்தாலி), சாந்தினி (குடும்பநல உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை), சங்கீதா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கும்பளாவளை மேற்கு, அளவெட்டி மத்தியில் மகனின் இல்லத்தில் இன்று (28.02.2001) புதன்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி:
*கும்பளாவளை மேற்கு,*
*அளவெட்டி மத்தி, அளவெட்டி.*

தகவல்:
**யோகநாதன்** (மகன்)
(84717)

### இராமநாதன் ஜெகதீசன்

**(காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி ஊழியர்)**

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் காரைநகர் பத்தர்கேணியடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் ஜெகதீசன் நேற்று (27.02.2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - மகேஸ்வரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் தையல்முத்துவின் மருமகனும் திருமதி இலக்ஷ்மியின் (காரைநகர், ப.நோ.கூ.ச. எழுதுநர்) அன்புக் கணவரும் ஜெயராணி, காலஞ்சென்ற ஜெகநாதன், இராமஜெயம் ஆகியோரின் சகோதரனும் மகேஸ்வரி, நவரட்ணம் (நீர்ப்பாசனத்திணைக்களம் - ஒட்டிசுட்டான்), பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், குலராஜா, சுந்தரமூர்த்தி, விமலாதேவி ஆகியோரின் சகலனும் சற்குணதேவி (யாழ்.போதனா வைத்தியசாலை), சற்குணராஜா (லண்டன்), நற்குணராஜா (காரைநகர் - ப.நோ.கூ.ச.), அருள்ராஜா, அருள்ராணி (லண்டன்), சத்தியரூபன் (யாழ்.மத்திய கல்லூரி), மோகனகரன் (ஊர்காவற்றுறைப் பிரதேசசபை), சரோஜா ஆகியோரின் சிறிய தந்தையும் ஜங்கரன், கிருஷிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2001) புதன்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்தர்கேணியடி,*
*காரைநகர்.* (84724)

தகவல்:
**இலக்ஷ்மி** (குஞ்சு - மனைவி)

### திருமதி நல்லதம்பி நல்லம்மா

கற்கோவளத்தைச் சேர்ந்த திருமதி நல்லதம்பி நல்லம்மா 25.02.2001 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தப்பர் நல்லதம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - நாகாத்தை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான பார்வதி, கனகம்மா ஆகியோரின் மூத்த சகோதரியும், இராசநாயகி (இளைப்பாறிய ஆசிரியை), அன்னபூரணம் (இளைப்பாறிய ஆசிரியை), அன்னபாக்கியம் (முன்னாள் ஆசிரியை - வட இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை), அன்னநாயகி (பெற்றோலியக் கூட்டுத்தாபனம், கொழும்பு), நல்லலிங்கம் (நீர்ப்பாசனத் திணைக்களம் - கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தாயாரும் வடிவேலு (இளைப்பாறிய ஆசிரியர்), பாக்கியராசா (இளைப்பாறிய மொழி பெயர்ப்பாளர்), பாலசுந்தரம் (கணக்காளர்) ஆகியோரின் மாமியாரும் இராஜமனோகரன் (ஆஸ்திரேலியா), இராகவானந்தம் (ஆசிரியர் - கொழும்பு), இரவீந்திரன் (சுவிஸ்), யசீந்திரன் (லண்டன்), விஜிதன் (**Ford Rhodes**), ரஜனி (ஆஸ்திரேலியா), **Dr.**ரஞ்சினி (மிருக வைத்தியர் - கண்டி) **Dr.**ராஜினி (கண் வைத்தியசாலை - கொழும்பு), கீதாஞ்சினி, இராஜகோசினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பேர்த்தியாரும் செல்லையாவின் (இளைப்பாறிய சிரேஷ்ட பொது வைத்திய பரிசோதகர்) சிறியதாயாரும் ஆனந்தா (கனடா), இரத்தினராசா, விசாகலட்சுமி, ஞானராசா (சுவிஸ்), ஞானசம்பந்தன் (சுவிஸ்), ஞானேந்திரா (லண்டன்), கனகேந்திரா, கிருஷ்ணபவானி (ஜேர்மனி), சுதேந்திரன் (சுவிஸ்), கிருஷ்ணானந்தராஜினி, ரஞ்சினி (கனடா) ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.02.2001) புதன்கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பருத்தித்துறை கோரியடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*ந.நல்லலிங்கம்(மகன்)*
*கற்கோவளம், பருத்தித்துறை.* (84721)

தகவல்:
**பிள்ளைகள்.**

# உதயன்

## இந்தியாவும் இரட்டை வேடமா?

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதன் பொருட்டுப் போர் நிறுத்தம் செய்வது உட்பட சில ஏற்பாடுகளை இலங்கை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு இந்தியத் தலைவர்கள், புதுடில்லி சென்றிருந்த ஜனாதிபதி சந்திரிகாவிடம் வலியுறுத்தி உள்ளனராம். இத்தகைய ஒரு செய்தியை கொழும்பில் அரசு சார்புப் பத்திரிகை ஒன்று வெளியிட்டிருக்கிறது.

இதேவேளை, இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெறும் போரில் அரச தரப்புக்கு உதவிகளை வழங்குவதற்கு இந்தியா தயாராக இருப்பதாக —

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், ஜனாதிபதி சந்திரிகாவிடம் உறுதி அளித்திருப்பதாக — மற்றொரு தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய அரசின் இந்த இரண்டு நிலைப்பாடுகளும் உண்மையானவையாக இருந்தால், அது தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள்ளிவிடும் வேலையே செய்ய விழைகின்றது என்பது அர்த்தம்.

இந்தியா இலங்கையின் அண்டை நாடு அந்தக் காரணத்தினால் அதனைப் பகைத்துக் கொண்டு — அதன் ஆசீர்வாதமும் விருப்பமும் இல்லாமல் — எதனையும் செய்வதற்குச் சந்திரிகா அரசு விரும்பவில்லை.

தனக்குப் பிரச்சினைகள் வரும் போதெல்லாம், முக்கிய கட்டங்களில் எல்லாம் இலங்கை அரசின் தலைவரும் அமைச்சர் பிரதானிகளும் இந்தியாவுக்கு "ஓடுவது" ஒன்றும் இரகசியமானதல்ல

எவ்வாறாயினும் இனப்பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்படுவதற்கு இந்தியாவின் ஆதரவு, உதவி தேவை என்று கொழும்பு அரசாங்கம் விரும்புவது போலவே —

இந்நாட்டின் தமிழ் மக்களில் மிகப் பெரும்பாலானோரும் விரும்புகிறார்கள். அது மட்டுமன்றி, இந்தியாவை தூரத்தே வைத்துக் கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது இயலாத காரியம் என்று கருதுவோரும் தமிழ் மக்கள் மத்தியில் அனேகர்.

தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை உணர்ந்து கொண்டு, புரிந்து கொண்டு நீதியான தீர்வு ஒன்று — திணிக்கப்படாத தீர்வு ஒன்று — கிடைப்பதற்கு இந்தியா உதவும் என்ற நம்பிக்கையே தமிழ் மக்கள் மத்தியில் இத்தகைய கருத்தை நீண்டகாலமாக வளர்த்துள்ளது.

அந்த நம்பிக்கைக்கு மாறாக, இலங்கை அரசாங்கத்தைப் போலவே, இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவும் இரட்டை வேடம்போடும் தன்மையைக் கொண்டிருக்கிறது என்ற கருத்துநிலையை அது தோற்றுவிக்கிறது.

சமாதானத்துக்கான போர் என்ற போர்வையுடன் இந்த நாட்டில் அழிவுகளையே அரசாங்கம் விளைவிக்கிறது. அத்தகைய போருக்கு உதவுவதற்குத் தயாராக இருப்பதாக இந்தியப் பிரதமர் கூறியிருப்பது —

தான் ஓர் அணு வல்லரசாக மாறிவருதால் எதனையும் எப்படியும் செய்யலாம் என்ற இறுமாப்புக் குணம் சார்ந்ததோ என்று சந்தேகமுற வைத்துள்ளது.

ஆன்மீக மேம்பாடும் ஆக்கமுறு செயற்பாடுகளும் மிகுந்து உலகின் சிறந்த பெரிய ஜனநாயக நாடாக மிளிரும் இந்தியா, இவ்வாறு இரட்டை வேடம் போடுமென ஈழத் தமிழர்கள் எதிர்பார்க்கவில்லை.

### நோர்வேயின் சமாதான முயற்சியை வலியுறுத்திவரும்

# தமிழ்க் கட்சிகளின் பிரமுகர்களுக்கு பேரினவாதிகள் கொலைபயமுறுத்தல்

## யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் மேயர் தகவல்

யாழ்ப்பாணம், பெப். 28

நோர்வே சமாதான முயற்சிகளை வலியுறுத்தியும், பிரிட்டன் விடுதலைப் புலிகளைத் தடைசெய்யக் கூடாது என்று வலியுறுத்தியும் வரும் தமிழ் அரசியல் வாதிகளுக்கு சிங்களப் பேரினவாதிகளினால் கொலைப் பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளது.

– இவ்வாறு நேற்று நடைபெற்ற யாழ். மாநகர சபை கூட்டத்துக்கு தலைமை வகித்து உரையாற்றிய யாழ். மாநகரசபை மேயர் சட்டத்தரணி என். ரவிராஜ் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபைக் கட்டடத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் உரையாற்றும்போது மேலும் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒரு தலைப்பட்ச யுத்த நிறுத்தத்தை அரசும் ஏற்றுக்கொண்டு யுத்த நிறுத்தம் செய்து புலிகளுடன் பேச வேண்டும் என்றும் –

தமிழீழ விடுதலைப் புலிகளை பிரிட்டன் தடை செய்யக்கூடாது என்றும் —

நாம் வலியுறுத்தி வருவதனால் தொலைபேசி மற்றும் கடிதங்கள் மூலம் எமக்கு கொலைப்பயமுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன.

நாங்கள் புலிகளுக்காகப் பரிந்து பேசுகின்றோம் என்றும் எங்களை புலிகளின் குரல் மற்றும் புலிகளின்வால் என்றும் கூறிவருகின்றார்கள்.

அரசியல் ரீதியான எமது நடவடிக்கைகளை நிறுத்தி வைப்பதற்காகவே இவ்வாறான அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன.

### கறுப்புப் பட்டிப் போராட்டம்

இதேசமயம் தற்போது நடைபெற்று வரும் யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதி ஊழியர்களின் கறுப்புப் பட்டிப் போராட்டம் குறித்து யாழ். மாநகர சபை முதல்வருக்கோ, ஆணையாளருக்கோ எதுவும் அறிவிக்கப்படவில்லை.

யாழ் மகநகரசபையில் ஆறு தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. இவற்றில் ஏதாவது ஒரு சங்கமாவது இந்த நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரியவில்லை.

சில கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று நேற்றுத்தான் எனது கையில் கிடைத்தது. ஆறுபேர் மட்டுமே அதில் கையெழுத்திட்டிருந்தனர்,

தொழிலாளர் ஏின் உரிமை மறுக்கப்பட்டால் அது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தி விளக்கங்கள் கேட்கப்பட வேண்டும். இதற்குச் சரியான பதில் கிடைக்காவிட்டால் எழுத்து மூலம் அறிவித்துவிட்டே தொழிற்சங்கப் போராட்டத்தை நடத்த வேண்டும்.

எமக்கு கோரிக்கைகள் கிடைக்க முன்னரே இங்கு கறுப்புப் பட்டிப் போராட்டத்தை ஆரம்பித்து விட்டனர்.

மாநகரசபையில் கடமையாற்றும் ஊழியர்கள் எவரும் பழிவாங்கப்பட்டதாக எமக்கு முறையிடவில்லை. ஆளணி அதிகரிப்பு இல்லாமல் எந்த ஊழியரையும் நிரந்தர மாக்க முடியாது.

### ஒருவரே சேவையில்

யாழ். மாநகரசபையைப் பொறுத்தவரை மூன்று சுகாதார வைத்திய அதிகாரிகள் கடமையாற்ற வேண்டிய தேவை இருக்கின்றபோதும் தகுந்த வைத்திய அதிகாரிகள் இல்லாத காரணத்தால் டாக்டர் இ. தெய்வேந்திரன் மட்டுமே கடந்த பத்து வருடங்களாகக் கடமையாற்றி வருகின்றார்.

ஊழியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவு அல்லது அது போன்ற கொடுப்பனவுகள் வழங்கப்படாது விட்டால் போராட்டம்நடத்தும் உரிமை தொழிலாளர்களுக்கு இருக்கிறது.

மாநகர சபையின் நிரந்தர ஊழியர்கள் அனைவருக்கும் இடர்கால கொடுப்பனவு வழங்கப்பட்டு விட்டது.

பத்திரிகையாளர்களின் சுதந்திரத்தை எவரும் கட்டுப்படுத்த முடியாது. அதற்காக கையில் பேனா வைத்திருப்பதற்காக எல்லாவற்றையும் எழுதலாம் என்று கருதக்கூடாது பத்திரிகைத் தொழில் ஒரு புனிதமான தொழில் பக்க சார்பாக செய்திகளை எழுதாமல் நடு நிலையில் நின்று செய்திகளை வெளியிட வேண்டும்.

யாழ். மாநகர சபையில் கடமையாற்றும் ஊழியர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்படாவிட்டால் அல்லது ஊழியர்களின் உரிமைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் அது பற்றிய முறைப்பாடு கிடைத்தால் நான் தகுந்த நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கின்றேன்.

சுகாதார வைத்திய அதிகாரியின் பிரச்சினை தொடர்பாக நேற்றிரவு சிலர் வந்து என்னுடன் உரையடினார்கள்.

சுகாதார வைத்திய அதிகாரி மாநகர சபை ஆணையாளருக்கு கட்டுப்பட வேண்டும் — அத்துடன் சுகாதாரக் குழு மற்றும் சபையின் மாதாந்தக் கூட்டத்துக்கும் அவர் சமுகமளிக்க வேண்டும்.

இந்த மூன்று செயற்பாடுகளையும் அவர் ஏற்றுக்கொண்டால் இந்தப் பிரச்சினைக்கு சுமுகமாகத் தீர்வு காண முடியும் என்று தெரிவித்திருந்தேன்.

சுகாதாரப் பகுதியில் 33 குடும்பநல சேவையாளர்கள் கடந்த 7 வருடங்களாகக் கடமையாற்றி வருகின்றார்கள். இவர்களில் 18 பேருக்கு மட்டுமே அடிப்படைக் கல்வித் தகைமை இருக்கிறது. 33 குடும்பநல சேவையாளர்களுக்கும் மாநகர சபை நிதியிலிருந்து 36 லட்சம் ரூபா சம்பளமாக வழங்கப்படுகிறது.

சுகாதார வைத்திய அதிகாரியின் பிரச்சினை தொடர்பாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை சபையினால் விசேட பொதுக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு ஆராயப்படும்.

சுகாதார வைத்திய அதிகாரியின் பதவிக்காலம் முடிவடைவதால் அப் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இதுவரையும் எட்டு விண்ணப்பங்கள் வந்து சேர்ந்துள்ளன — என்றார். அவர்.

(க-5-173)

### கறுப்புப்பட்டி போராட்டத்தில் குதித்துள்ள

## சுகாதார ஊழியருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடிவு

யாழ்ப்பாணம், பெப். 28

கறுப்புப் பட்டிப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பகுதி ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

—இவ்வாறு நேற்று நடைபெற்ற யாழ். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிலதீர்மானங்களின் விவரம் வருமாறு:-

★ சுகாதாரப் பகுதி பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்காக எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கூட்டம் கூட்டுதல் வேண்டும்:

★ மார்ச் 31 ஆம் திகதி தந்தை செல்வா சதுக்கப் பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்ய வேண்டும்.

★ மாநகரசபைக்கு என மகுடவாசகம் ஒன்றைத் தயாரிப்பதுடன் சபைக் கீதமும் ஒலிப்பதிவு செய்யப்பட வேண்டும்.

★ சபையின் கூட்டம் ஆரம்பமாகும் முன்னர் சபையின் கீதம் ஒலிக்கச்செய்ய வேண்டும்.

★ யாழ். பஸ் நிலையத்தில் விளம்பர ஒலிபரப்புச் சேவையை ஆரம்பித்து நடத்துதல் வேண்டும்.

★ சேதமடைந்திருக்கும் சந்தைக் கட்டடங்களைச் சிறிது சிறிதாகத் திருத்தம் செய்தல்.

★ கலாசார சீரழிவுகளுக்கு எதிரான கருத்தரங்கு ஒன்றினை மாநகரசபை பொறுப்பெடுத்து நடத்துதல்.

★ இந்தக் கருத்தரங்கில் கலாசார சீரழிவுக்கு எதிரான இலவச கையேடு ஒன்றினை வெளியிடுதல். (க-5)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 28

முத்து இராதாகிருஷ்ணனின் 'உதிர வேர்கள்' என்னும் நூலின் அறிமுக விழா யாழ். இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

செங்கை ஆழியன் தலைமையில் இடம்பெறும் இந்த விழாவில் வெளியீட்டுரையை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம் பிள்ளையும், பதிப்புரைகளை மூதறிஞர் சொக்கன், வல்வை பூ. ஆனந்தராஜ், நல்லை அமிழ்தன் ஆகியோர் நிகழ்த்துவர்.

(உ-3)

### ஊரடங்குவேளைகிரனேட்டுடன்நடமாடிய

## ஈ.பி.ஆர். எல். எவ். சுரேஷ் அணி உறுப்பினர்கள் இருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 28

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்த வேளை கிரனேட்டுடன் நடமாடியதாகத் தெரிவித்து ஈ. பி. ஆர் எல். எவ். சுரேஷ் அணியைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படும் இருவரை நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.

துரையப்பா விளையாட்டரங்குப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட நாகமுத்து நாகேந்திரன் (ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), சுப்பிரமணியம் நாகேஸ்வரன் (மூத்த விநாயகர் வீதி, நல்லூர்) ஆகிய இருவரிடம் இருந்து கைக்குண்டு ஒன்றை தாம் கைப்பற்றியுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்

இந்த இருவரையும் நேற்று யாழ் நீதிமன்றில் ஆஜர் படுத்திய பொலிஸார் இவர்களுக்கு அரசாங்கம் ஆயுதங்கள் எவற்றையும் வழங்கவில்லை என்று நீதிவானிடம் சுட்டிக் காட்டினர்.

இது குறித்து பூர்வாங்க விசாரணைநடத்தியநீதிவான் இ. த. விக்னராஜா சந்தேக நபர்கள் இருவரையும் அடுத்த மாதம் 12 ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்குமாறுஉத்தரவிட்டார்.

(க—6—5—ரி)

## நாளை

மாசி 17

**வியாழக்கிழமை**

திதி: ஷஷ்டி
மாலை 5-33 வரை.
நட்சத்திரம்: பரணி
பிற்பகல் 1-09 வரை.
ஷஷ்டி விரதம்
கார்த்திகை விரதம்
சுபநேரம்: 7.58 — 9.28
ராகுகாலம்: 1.58 — 3.28
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

கேவலம், பணம் சம்பாதிப்பதற்காக நீ ஒழுக்கத்தை விற்றுவிடாதே.

## போராட்டம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ் மாநகரசபை சுகாதரா வைத்திய அதிகாரியின் வேண்டுகோளுக்கு அமைய சுகாதாரப் பகுதி ஊழியர்களின் கறுப்புப் பட்டி போராட்ட நடவடிக்கை தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளதாகச் சுகாதாரப் பகுதி ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். சிவமகாராசா, மாவை சேனாதிராஜா, முன்னாள் உதவி மேயர் எஸ். சேவியர், மாநகர மேயர் என். ரவிராஜ் ஆகியோருக்கு இடையில் நேற்றுக் காலை சுகாதார ஊழியர்களின் பிரச்சினை தொடர்பாகக் கலந்துரையாடல் நடைபெற்றது. இக்கலந்துரையாடலைத் தொடர்ந்து மார்ச் 3 ஆம் திகதி சனிக்கிழமை வரை தமது போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். [உ-5]

# தென்னை வருமானத்தை நம்பியிருந்த அனைவருக்கும் நிவாரணம் வழங்குக!

## உற்பத்தியாளர் சங்கத்தினர் அமைச்சரிடம் கோரிக்கை

தென்னையினால் கிடைக்கும் வருமானத்தையே முழுக்க முழுக்க நம்பி இருந்த தோட்ட உரிமையாளர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும் என்று வடமாநில தெங்கு உற்பத்தியாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக இந்தச் சங்கத்தின் உறுப்பினர்களைக் கொண்ட குழு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து உரையாடி அவரின் அவசர உதவியைக் கோரியுள்ளது.

தென்னை மரங்களைக் கண்டபடி தறித்து வருவதைத் தடுத்து நிறுத்தவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குழுவினர் அமைச்சரிடம் கேட்டுக்கொண்டனர்.

சங்கத்தின் உறுப்பினர்கள் வலியுறுத்திய விடயங்கள் வருமாறு:-

★ தென்னை மரங்களைத் தறிப்பதைத் தவிர்த்து படையினரின் தேவைக்கு வேறு மாற்று மரங்களைத் தெரிவு செய்ய வேண்டும். அந்த மரங்கள் தென்னையிலும் பார்க்க உற்பத்திச் செலவு குறைந்ததாகவும், தென்னையிலும் பார்க்க குறைந்த வருமானமும், சுயதொழில் வாய்ப்பிற்குத் தேவையற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

★ கடந்த ஒருவருடகாலமாகத்தோட்ட உரிமையாளர்கள் தோட்டத்திற்கே போகவில்லை தென்னையை நம்பி வாழ்ந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர் எந்த விதமான வருமானமும் இன்றிக் கஷ்டப்படுகிறார்கள் இரு சாரருக்கும், தொழில் வருமானத்தில் ஏற்பட்ட நஷ்டத்திற்கு உடனடி நிவாரணம் வழங்க வேண்டும்.

★ மக்கள் நடமாடக்கூடிய, மீளக்குடியமரக் கூடிய பிரதேசங்களில்— உள்ள தோட்டங்களுக்கு உரிமையாளர்கள் சென்று தோட்ட நடவடிக்கைகளை ஆரம்பிக்க அனுமதிக்க வேண்டும்.

இதன் மூலம் தோட்டம் அழிவிலிருந்து பாதுகாக்கப்படும்.

திருட்டுக்கள் தடுக்கப்படுவதுடன் தோட்ட அபிவிருத்தியையும் ஆரம்பிக்கலாம்.

தேங்காய், தேங்காய் எண்ணெய், கிடுகு போன்றவற்றின் விலைகளைக் குறைக்கவும் முடியும். (க)

# 500 மீனவக் குடும்பங்கள் உதவி இன்றி நிர்க்கதி நிலையில்

## பத்து மாதங்களாகக் கஷ்டம்

யாழ்ப்பாணம்' பெப். 28

வடமராட்சி கிழக்கிலிருந்து கடந்த 10 மாதங்களுக்கு முன் இடம் பெயர்ந்த 500 மீனவக்குடும்பங்கள் உதவிகள் எதுவும் வழங்கப்படாமையினால் நிர்க்கதியாகியுள்ளன.

கடந்த வருடம் மார்ச் மாதம் 3 ஆம் திகதி வடமராட்சி கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்த இந்தக் குடும்பங்கள் பருத்தித்துறை உட்பட வடமராட்சியின் பல பகுதிகளிலும் தஞ்சமடைந்துள்ளன.

கட்டைக்காடு, நாகர் கோவில், குடாரப்பு, மாமுனை, செம்பியன்பற்று, தாழையடி, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களில் இடம் பெயர்ந்த இக்குடும்பத்தவர்களுக்கு எவரும் இது வரை உதவி செய்யவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இடம் பெயர்வினால் இவர்கள் பல லட்சம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்களை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

பாதிக்கப்பட்ட தமது மீனவக் குடும்பங்களுக்கு உதவுமாறு கோரி இந்த மீனவர்களின் சார்பில் வத்திராயன் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. (க 5)

# மட்டு. கல்வியியற் கல்லூரிக்கு அனுமதி கடிதங்கள் வந்தன

தென்மராட்சி, பெப். 28

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்கை நெறிகளுக்கென தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்ட மாணவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் கடந்த சனிக்கிழமை அந்தந்தத் தபால் நிலையங்களுக்கு வந்துள்ளன.

கல்லூரியில் கற்கைநெறிகள் பெப். 22 ஆம் திகதி ஆரம்பமாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ள கடிதங்கள் மாணவர்கள் பலருக்கு திங்கட்கிழமை கிடைத்துள்ளன.

(க-117)

# இளைஞர் சேவை மன்றப் போட்டிகள்

வலி. வடக்கு, பெப். 28

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் பதிவு செய்யப்பட்ட இளைஞர் சேவை மன்றங்களுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள் அடுத்தமாத நடுப்பகுதி முதல் நடைபெறவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் இந்தப் போட்டிகளை நடத்துவதற்கு வேண்டிய முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை இளைஞர் சேவை அலுவலர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (க-86)

# தென்மராட்சி மாணவருக்கு விரைவில் பாடநூல்கள்

## விவரங்களை உடன் அனுப்புமாறு பணிப்பு

தென்மராட்சி, பெப். 28

வலிகாமம் பகுதியில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான இலவசப் பாடப்புத்தகங்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன.

தென்மராட்சி வலயப் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய வலயப் பாடசாலைகளில் தற்காலிகமாக இணைந்துள்ள தென்மராட்சி கல்வி வலய மாணவர்களின் விவரங்களை உடனடியாகத் தத்தமது கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

விவரங்கள் கிடைத்ததும் புத்தகங்களை அந்தந்தக் கோட்டக் கல்வி அலுவலகங்கள் ஊடாக விநியோகிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை வடமராட்சி வலயப் பாடசாலைகளில் இணைந்துள்ள தென்மராட்சி வலய மாணவர்களின் விவரங்களை நெல்லியடியில் இயங்கும் வலய அலுவலகத்தில் சமர்ப்பித்து புத்தகங்களைப் பெற்று மாணவர்களுக்கு உடனடியாக விநியோகிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது- (க—117)

# எழுத்தாளர்களின் புத்தகங்களை விற்றுத்தர நடவடிக்கை

## ப.நோ.கூ. சங்கத்தின் முன்மாதிரி

தென்மராட்சி, பெப். 28

இலைமறைகாயாக உள்ள எழுத்தாளர்களின் ஆற்றலை வெளிக்கொணர்ந்து அவர்களின் படைப்புக்களை அறிமுகம் செய்வதற்காக, அவற்றை விற்பனை செய்து கொடுக்க கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தினர் தமிழ் எழுத்தாளர்களின் புத்தகக் கண்காட்சியை நடத்தவுள்ளனர்.

முதற் கட்டமாக வடபகுதியில் உள்ள எழுத்தாளர்களின் நூல்களை கொள்வனவு செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும், சங்கத்தின் மூலம் நூல்களை விற்பனை செய்ய விரும்பும் எழுத்தாளர்கள் தொடர்பு கொள்ளுமாறும் சங்கத் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை அறிவித்துள்ளார்.

இதுவரை புத்தகங்களை வெளியிடாமல் உள்ள எழுத்தாளர்களையும் தொடர்பு கொள்ளுமாறு சங்கம் அறிவித்துள்ளது. (க-117)

# ஆராதனைகள் ஆரம்பம்

அரியாலை, பெப். 28

கொழும்புத்துறை வளன்புரம் புனித சூசையப்பர் தேவாலயத்தின் பூசை ஆராதனை வழிபாடுகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

ஞாயிற்றுகிழமைகளில் காலை 7 மணிக்கும் ஏனைய தினங்களில் தினமும் 6 45 மணிக்கும் ஆராதனை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. (க-17)


# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியையும் எமது வகுப்பாசிரியையுமான
**திருமதி உமா ஜெயராஜா**
அவர்களின் அன்புத் தந்தையார்

## எஸ். முத்துத்தம்பி

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

10 B மாணவர்கள்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

(84699)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

★★★★★★★★★★★★★★★

நாவாந்துறை புனித மரியாள் ஆலய மணிக்கூட்டுக் கோபுரத்தைப்
புனரமைப்பதற்காகப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ரூபா 1,00,000 நிதி உதவி வழங்கி உதவிய
வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு—கிழக்கு தமிழ் விவகார இந்து கலாசார அமைச்சராகிய

## கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா

அவர்களையும்
யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்

## திரு. வி. கே. குகேந்திரன் (ஜெகன்)

அவர்களையும்
மாநகரசபை உறுப்பினர்

## திரு. து. இளங்கோ (றீகன்)

அவர்களையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பங்குத் தந்தையும்,
புனித மரியாள் ஆலய
பங்கு மக்களும்,
நாவாந்துறை.

(84700)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## சித்த மருத்துவத்துறை விரிவுரைகள்

புதிய கல்வியாண்டுக்கான மேற்படி விரிவுரைகள், சகல வருட மாணவர்களுக்கும் 05-03-2001, முதல் இல 166, 168, கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள சித்தமருத்துவத்துறையில் ஆரம்பமாகும்.

- பதிவாளர்

(சி-15487)



# இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளைத் தலைமையகம்

## பிரிவுத் தேர்தல் - 2001

மேற்கண்ட விடயம் சம்பந்தமான விளம்பரம் 25-02-2001 ஆம் திகதிய உதயனில் வெளியாகி இருந்தது. அந்த விளம்பரத்தின் கீழ் அதனை அறிவிப்பவர் வை. தியாகராசா, கௌரவ செயலாளர் என்று தவறுதலாகக் குறிப்பிடப்பட்டுவிட்டது. அதனை தி. உயந்தசூரியன், கௌரவ செயலாளர் எனக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட சகலரையும் வேண்டுகிறோம்.

இ. செ. சி. சங்கம்.
(யாழ். கிளை)

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/15499)



# கற்கும் நிலை மாணவ பெண் தாதிய உத்தியோகத்தர்களை பயிற்சியின் பொருட்டு ஆள் சேர்த்தல் - 2001

மேற்படி விடயம் சம்பந்தமாக என்னால் 22-02-2001 ஆம் திகதி உதயனில் வெளியிடப்பட்ட விளம்பரம் சம்பந்தமானது இதற்கான விண்ணப்பத்தை ஏற்றுக் கொள்ளும் திகதி 15-03-2001 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரிகள் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான பாடங்களில் 3 இற்கு குறையாத சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் க. பொ. த (சா/தரம்) பரீட்சையில்/ சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில்/ தேசிய கல்வித் தராதரப் பரீட்சையில் இரு அமர்விற்கு மேற்படாமல் கணிதம், தமிழ், விஞ்ஞானம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச்சித்தியுடன் மொத்தம் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

கலை மற்றும் வணிகத்துறை பயின்றவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏனைய விவரங்களை 22-02-2001 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் பார்வையிடலாம்.

வைத்திய கலாநிதி
செல்வி என். கனகரட்னம்
பணிப்பாளர்,
அரசினர் பொது வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி/15489)

### பிரதமருக்கு அனுப்புவதற்காக

# உடன் யுத்தத்தை நிறுத்தும்படி கோரி

# ஒரு லட்சம் கையெழுத்துகள் சேகரிப்பு

## திட்டம் இன்று பொரளையில் ஆரம்பம்

கொழும்பு,பெப்.28

போர் உடனடியாக முடிவிற்கு கொண்டுவரப்பட வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு சகல இன மக்களினதும் கௌரவத்தை உறுதி செய்யும் தீர்வொன்று காணப்பட வேண்டும் -

என்பன உட்பட 12 கோரிக்கைகளை முன்வைத்து மக்களின் கையெழுத்தை அஞ்சலட்டையில் திரட்டி அதனைப் பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்கவிற்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கையை ஜனநாயகத்திற்கான கூட்டணி மேற்கொள்ளவுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஜனநாயகத்திற்கான கூட்டணி இதனை அறிவித்தது.

ஒரு இலட்சம் பொதுமக்களிடம் முதற்கட்டமாக இதற்கான கையெழுத்தைப்பெற இந்த அமைப்புத் தீர்மானித்துள்ளது.

இன்று புதன்கிழமை பொரளை வை.எம்.சி.ஏ.யில் பொதுமக்களிடம் அஞ்சலட்டையில் கையெழுத் தைப் பெறும் நிகழ்ச்சி ஆரம்பித்து வைக்கப்படும்.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவைப் பதவிநீக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் ஜனநாயகத்திற்கான கூட்டணி முன்வைத்துள்ளது.

செய்தியாளர் மாநாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

2000 ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலின் போது 17 மாவட்டங்களில் ஊழல்களும், மோசடிகளும் நடைபெற்றன. எனினும், இந்தக் குற்றச் செய்கைகளில் ஈடுபட்டவர்களைச் சட்டத்திற்கு முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அரசாங்கம் உடனடியாகத் தேர்தலின் போது ஊழல்களிலும், மோசடிகளிலும் ஈடுபட்டவர்ளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கையில் வாக்களிக்கத் தகுதியிருந்தும் அடையாள அட்டை இல்லாத காரணத்தால் வாக்குரிமையைப் பயன்படுத்த முடியாத நிலையில் 38 வீதமான மக்கள் உள்ளனர். இவர்களுக்கு அடையாள அட்டையைப் பெறுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

நீதித்துறை சுயாதீனமாகவும், கட்சிகளின் தலையீடின்றியும் செயற்பட வேண்டும்.

சுயாதீன பொலீஸ் ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு போன்றவை ஏற்படுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவை அளிக்குமாறும் பொதுமக்களையும், கட்சிகளையும் நாங்கள் கேட்டுக்கொள்ளவுள்ளோம்.

இதே போன்று ஜனாதிபதி முறை நீக்கப்படவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கென ஒழுக்க நெறிக் கோவையொன்று ஏற்படுத்தப்படவேண்டும் அல்லது ஆகக் குறைந்தளவில் ஜனாதிபதியை நாடாளுமன்றத்திற்கு விளக்கமளிக்க வேண்டியவராக்கும் சட்டமாவது கொண்டுவரப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மை காணப்பட வேண்டும். தொடர்பு சாதனங்களையும், தொழிற்சங்க நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தும் சட்டங்கள் நீக்கப்பட வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டது. (ம)

# பிரசவ காலத்தில் ஆண்களுக்கும் விடுமுறை வழங்கப்பட வேண்டும்

## மகளிர் விவகார அமைச்சர் ஆலோசனை

பிரசவ விடுமுறை ஆண்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று மகளிர் விவகார அமைச்சர் சுமேதா பி.ஜயசேன அரசுக்கு ஆலோசனை கூறியிருக்கிறார்.

பிரசவ காலத்தில் பெண்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர். வீட்டு வேலைகளைச் செய்ய முடியாமல் கஷ்டப்படுகின்றனர். எனவே இவர்களுக்குத் துணையாக பிள்ளைப் பராமரிப்பிலோ அல்லது வேறு வீட்டுக்கடமைகளிலோ ஆண்களும் ஈடுபடுவதன் மூலம் பிரசவத் தாய்மார்களுக்கு ஏற்படும் கஷ்டங்களைக் குறைக்க முடியும் என மகளிர் விவகார அமைச்சர் தெரிவித்தார்.

எனவே தான் மேலை நாடுகளைப்போல இங்கும் ஆண்களுக்கும் பிரசவ காலத்தில் இரண்டு மாத விடுமுறை வழங்கப்பட வேண்டுமென அவர் ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறியிருக்கிறாராம். (ம)

# மலேரியாவை கட்டுப்படுத்துவதில் மாநகர சுகாதாரப் பகுதி வெற்றி

கடந்த ஆண்டு யாழ்.மாநகரசபை எல்லைக்குள் மலேரியா காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதில் மாநகர சபையின் சுகாதாரப்பிரிவினர் திறம்பட செயற்பட்டுள்ளனர்.

சுகாதாரப் பிரிவின் கடந்த ஆண்டுக்கான (2000) மீளாய்வு அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் மலேரியாக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1743 ஆக இருந்ததாகவும் கடந்த டிசம்பரில் இந்த எண்ணிக்கை 219 ஆகக் குறைந்துள்ளதாகவும் அறிக்கையில் புள்ளி விவரங்கள் மூலம் கூறப்பட்டுள்ளன.

மேலும், பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட்ட மாணவர்களுக்கான நலசேவை முகாம்களின் பணிகள் சிறப்பாக அமைந்திருப்பதாகவும் யாழ்.மாநகராட்சி சுகாதார பிரிவினரின் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-ஒ)

# மாலைதீவு செல்லக் காத்திருந்த 19 தமிழ் இளைஞர்கள் கைது!

## நீர்கொழும்புப் பகுதியில் சனியன்று சம்பவம்

கொழும்பு,பெப்.28

மாலைதீவுக்குச் செல்லும் நோக்கத்துடன் நீர்கொழும்பு போரத்தோட்டப்பகுதி லொட்ஜ்களில் தங்கி இருந்த 19 தமிழ் இளைஞர்கள் நீர்கொழும்புப் பொலீஸாரினால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

21 வயதுக்கும் 23 வயதுக்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள் என்று கூறப்படும் இந்த இளைஞர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, கல்முனை, கைதடி, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவரும் மாலைதீவு சென்று அங்கிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் திட்டத்துடன் பொலீஸ் பதிவு ஏதும் இன்றி இருந்ததாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். இவர்களின் கடவுச் சீட்டுக்களையும் பொலீஸார் பறிமுதல் செய்துள்ளனர். (ம)

### சர்வதேச ரீதியிலான பரீட்சையில்

# யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்கள் இருவருக்குத் தங்கப் பதக்கங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.28

ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகம் பாடசாலை மாணவர்களிடையே சர்வதேச ரீதியில் நடத்தும் வருடாந்தப் போட்டிப் பரீட்சையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த இரு மாணவர்கள் கணித பாடத்தில் தங்கப் பதக்கம் பெற்றுள்ளனர்.

பல்வேறு வகுப்பு மட்டங்களில் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் கடந்த வருட இறுதியில் நடத்தப்பட்ட இந்தப் போட்டிப் பரீட்சையில் யாழ்.இந்துக் கல்லூரி பெற்ற பெறுபேறுகள் வருமாறு:-

**கணிதம்**

தோற்றியோர் - 404; அதிவிசேட சித்தி-1; விசேடசித்தி-67; திறமைச் சித்தி-130.

ஜோதீஸ்வரசர்மா சிவராமசர்மா (தரம் 11), சிவப்பிரகாசம் மயூரன் (தரம் 9) ஆகியோர் தங்கப் பதக்கம் பெறுகின்றனர்.

**ஆங்கிலம்**

தோற்றியோர்-275; விசேட சித்தி - 01; திறமைச் சித்தி-18.

**விஞ்ஞானம்**

தோற்றியோர்-327; அதிவிசேட சித்தி-13; விசேடசித்தி-55; திறமைச் சித்தி-93. (உ)

# வடக்கு-கிழக்குப் பகுதிகளில்

# நிர்வாக அதிகாரிகள் சேவை நீடிப்பால் புதியவர்கள் நியமனம்பெற முடியாத நிலை

யாழ்ப்பாணம்,பெப்.28

வடக்கு - கிழக்கு பகுதிகளில் உள்ள பல நிர்வாக சேவைப் பதவிகளில் தொடர்ந்து பதவி நீடிப்புப் பெற்றவர்கள் நியமனம் பெற்று வருவதால் புதியவர்கள் நியமனம் பெற முடியாத நிலை தோன்றியுள்ளதாகப் பரவலாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டு வருகிறது.

இலங்கை நிர்வாக சேவைக்கு கடந்த பல வருடங்களாகத் தமிழர்கள் நியமனம் பெற முடியாத நிலைமை நீடித்து வருகிறது.

இதே நேரம் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த பல பதவிகள் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வெற்றிடமாகக் காணப்படுகின்ற போதிலும் கூட அந்தப் பதவிகளுக்குத் தொடர்ச்சியாக ஓய்வு பெற்ற அலுவலர்களே ஒப்பந்த அடிப்படையில் நியமனம் பெற்று வருகின்றார்கள்.

இத்தகைய துர்ப்பாக்கிய நிலைமை காரணமாகப் புதிய நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்படாமல் விடப்படுவதுடன் அவர்களுக்கான சந்தர்ப்பமும் கைநழுவிப் போய் விடுகிறது.

இதேவேளை வடக்கு-கிழக்கில் பல பதவிகளை ஒருவரே பதில் கடமை என்று பணியாற்றிவரும் நிலைமையும் காணப்படுகின்றது. (க-86)

# வரவு செலவுத் திட்டங்கள் இந்த ஆண்டில் இரண்டு

கொழும்பு,பெப்.28

இந்த ஆண்டு நாடாளுமன்றத்தில் இரு வரவு-செலவுத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

எதிர்வரும் 8ஆம் திகதி ஒரு வரவு-செலவுத் திட்டமும் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் இன்னுமொரு வரவு-செலவுத் திட்டமும் சமர்ப்பிக்கப்பட உள்ளன.

அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்பட இருக்கும் வரவு-செலவுத் திட்டம் இந்த ஆண்டுக்கானது. அதே நேரம் 2002ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை எதிர்வரும் நவம்பர் மாதத்தில் சமர்ப்பிக்க நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்த ஆண்டுக்கான வரவு - செலவு திட்டத்தில் தனியார் மருத்துவ வசதிகளை விரிவுபடுத்தும் வகையில் விலக்களிக்கப்பட்ட சில பொருள்களுக்கு மீண்டும் ஜி.எஸ்.ரி வரி விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றில் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டாலும் அதன் மீதான விவாதம் 12ஆம் திகதியே ஆரம்பமாகும். ஏப்ரல் 11ஆம் திகதிவரை அது இடம்பெறும். (ம)

# தாதியர் பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்பட்டோர்

யாழ்ப்பாணம்,பெப்.28

யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிப் பாடசாலையில் தாதியர் பயிற்சி நெறியைத் தொடர்வதற்கு 63 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரையும் நாளை வியாழக்கிழமை காலை தாதியர் பயிற்சிப் பாடசாலைக்கு சமுகம் அளிக்கும்படி யாழ்.போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

**யாழ். மாவட்டம்**

வி.திவாகர் (தும்பாலை, அச்சுவேலி), கே.கிருஷா (உரும்பிராய் தெற்கு), எஸ்.கனாயினி (காந்தியூர், புலோலி தெற்கு), வி.யாழினி (கல்வயல், சாவகச்சேரி), பி.சுதர்ஜியா (புலோலி தெற்கு), கே.திருச்செல்வி (சங்கத்தானை), எஸ். மேகலா (கோப்பாய் மத்தி), என்.மஞ்சுளா (சித்தன்கேணி), பி.ஈ.தியோடர் (யாழ்ப்பாணம்), ரி.பரஞ்சோதி (காரைநகர்), ஜெ.புண்ணியமூர்த்தி (நீர்வேலி வடக்கு), வை.ராஜகோபால் (ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), ஏ.அலன் (சுதுமலை வடக்கு), கே.பத்மாவதி (கந்தரோடை), எஸ்.விக்னேஸ்வரன் (சாவகச்சேரி வடக்கு), ஏ.திருசாந்தி (வரணி), ஆர்.விஜயகலா (புலோலி மேற்கு), வி.மஞ்சுளா (நவாலி தெற்கு), என்.நிறஞ்சலா (வியாபாரிமூலை, பருத்தித்துறை), ஒ.அருள்நந்தினி (விடத்தற்பளை),

கே.வானதி (கச்சேரி வீதி, கொடிகாமம்), ரி.பாலசுப்பிரமணியம் (வியாபாரி மூலை, பருத்தித்துறை), ரி.தனிநாயகி (நீர்வேலி தெற்கு), பி.கொலஸடிகா (நவாலி கிழக்கு), ரி.தாரணி (பண்டத்தரிப்பு), ரிராமலிங்கம் (இடைக்காடு), எஸ்.மதிவதனி (கல்வயல்), ரி.யசிதா (சங்கானை), கே.சைலஜா (புத்தூர் கிழக்கு), ஏ.நர்மதா(புத்தூர்)

ஆர்.சிவாஜினி (மீசாலை கிழக்கு), என்ராதிகா (தாவடி), ஜே.மேனகா (துன்னாலை மத்தி, கரவெட்டி), ரி.சந்திரகலா (கொடிகாமம்), கே.பவானி (நல்லூர்), வி.பாமினி (புலோலி தெற்கு), ஐ.பத்மாவதி (வேம்பிராய், கொடிகாமம்), என்.மகேஸ்வரி (சுன்னாகம்), பி.சுகந்தினி (சாவகச்சேரி), எஸ்மலைமகள்(மாவிட்டபுரம்), எஸ்.சாந்தலோஜினி (காரைநகர்), எம்தனசீலா (அராலி வடக்கு)

**முல்லைத்தீவு மாவட்டம்**

என்.சுதாகரன் (ஆலங்குளம், துணுக்காய்), ரி.சிறிதர்சினி (மாமுனை, முள்ளியவளை), ரி.சௌமினி (முள்ளியவளை), எஸ்.தயாராணி (முள்ளியவளை), எஸ்ரஞ்சினி (முள்ளியவளை), எஸ்.ஆனந்ததர்சினி (ஸ்கந்தபுரம், கிளிநொச்சி), வி.ஜெயசுதா (முள்ளியவளை), பி.கஜனா (முள்ளியவளை),

(13ஆம் பக்கம் பார்க்க)

### மன்னார் மாவட்டத்தில்

# ஐந்து அகதி முகாம்களில் உள்ளோர் அரச காணிகளில் குடியமர்த்தப்படுவர்

மன்னார் மாவட்டத்தில் ஐந்து அகதி முகாம்களிலுள்ளவர்களை அரச காணிகளில் குடியமர்த்த மன்னார் செயலகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதன் முதற் கட்ட நடவடிக்கையாக வவுனியா முகாமிலுள்ள மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று இடங்களில் குடியமர்த்தப்பட உள்ளனர்.

புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இவ்வாண்டில் அகதி முகாம்களிலுள்ள மக்களை மீளக் குடியமர்த்தும் செயற்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து முகாம்களில் தங்கி இருக்கும் சுமார் 1500 குடும்பங்களை மன்னார் மாவட்டத்திலுள்ள அரச காணிகளில் குடியமர்த்த மன்னார் செயலக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

வவுனியா முகாமிலுள்ள மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 340 குடும்பங்களில் தலா 100 குடும்பங்களை மடுக்கரைப் பகுதியிலும், மருதமடுப் பகுதியிலும், 140 குடும்பங்களை சிலாபத்துறைப் பகுதியிலும் குடியமர்த்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்திலுள்ள வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களை சொந்த இடங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் -

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தோர் உரிய காலத்தில் மீண்டும் யாழ்ப்பாணம் அனுப்பப்படுவார்கள் எனவும் -

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஐந்து வருட நீண்ட குத்தகை அடிப்படையில் பாலாவி தென்னந்தோட்டம், மரமுந்திரிகைக் காணி, தொம்மைக் குட்டி வாடி ஆகிய பகுதியில் குடியமர்த்தப்படுவார்கள் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# இலங்கை மீனவர் இந்திய எல்லை கடந்து அரபுக்கடல் செல்ல அனுமதி

கொழும்பு,பெப்.28

இந்திய - இலங்கை மீன்பிடி ஒத்துழைப்பு உடன்படிக்கை எதிர்வரும் ஏப்ரல் மாதம் அமுலுக்கு வருகின்றது. ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் இந்திய விஜயத்தின்போது பல்வேறு முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டதாக மீன்பிடித்துறை, நீரியல் வள அமைச்சு தெரிவித்துள்ளது.

இரு நாடுகளையும் சேர்ந்த மீனவர்களும் பரஸ்பரம் ஒவ்வொரு நாட்டுக்கும் சொந்தமான கடற்பிராந்தியங்களை ஊடுருவும்போது ஏற்படும் பிணக்குகளைத் தீர்ப்பதே இந்த உடன்படிக்கையின் முக்கிய நோக்கமாகும். இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி நீண்ட நேரம் கலந்துரையாடியதாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இந்த உடன்படிக்கைக்கமைய இலங்கை மீனவர்கள் அரேபியக் கடலுககுச் செலல அனுமதி வழங்க இந்தியா இணங்கியுள்ளது. (ஐ)

## உள்ளூர் உற்பத்தி பொருள்கள் விற்பனைக்கு ஊக்குவிப்பு

தென்மராட்சி,பெப்.28

யாழ்மாவட்ட உற்பத்தி நிறுவனங்களினால் தயாரிக்கப்படும் அத்தியாவசிய உற்பத்திப் பொருள்களை அதிக அளவில் விற்பனை செய்யும் கிளை ஊழியர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசில்களை வழங்க கட்டைவேலி - நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர்.

லாலா, மில்க்வைற் சோப் நிறுவனங்களின் உற்பத்திப் பொருள்கள், 'பயோ ரெக்' சோடா நிறுவனத்தின் உற்பத்திப் பொருள்கள், கூட்டுறவுத் திணைக்களத்தின் கால்நடை உணவுகள் ஆகியவற்றை அதிக அளவு விற்பனை செய்யும் கிளை ஊழியர்களுக்கே ஊக்குவிப்பு பணப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக சங்கத் தலைவர் தசிதம்பரப்பிள்ளை தெரிவித்துள்ளார். (ஐ-117)

## திறன் வளர்க்கும் போட்டி; வெற்றி பெற்ற மாணவர்கள்

யாழ்ப்பாணம்,பெப்.28

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் யாழ்.கல்விவலய மட்டத்தில் அண்மையில் நடைபெற்ற திறன் வளர்க்கும் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மூன்று பிரிவுகளாக நடைபெற்ற இப் போட்டியில் கதைசொல்லல், கதை எழுதுதல் மற்றும் பாகம் ஆடல் (ROLE-PLAY) என்பன இடம்பெற்றன. இந்தப போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகள் மற்றும் மாணவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

**பாகம் ஆடல்**

ஆரம்பப் பிரிவு:- புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி(முதலாம் இடம்), யாழ்.இந்து மகளிர் கல்லூரி (இரண்டாம் இடம்), யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் (மூன்றாம் இடம்)

மத்தியபிரிவு:- பெரியபுலம் ம.வி. (முதலாம் இடம்), யாழ்.இந்து மகளிர் கல்லூரி (இரண்டாம் இடம்), கொக்குவில் இந்துக் கல்லூரி (மூன்றாம் இடம்)

மேற்பிரிவு:-கொக்குவில் இந்துக் கல்லூரி (முதலாம் இடம்), யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம் (இரண்டாம் இடம்), அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் (மூன்றாம் இடம்)

**கதை சொல்லல்**

மத்திய பிரிவு- சசிரிஸ்சின் டிலானி - சென்சாள்ஸ் ம.வி. (முதலாம் இடம்), மாதுமை கந்தையா - புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி (இரண்டாம் இடம்), தரங்கினி இரவீந்திரராசா - வேம்படி மகளிர் கல்லூரி (மூன்றாம் இடம்)

மேற்பிரிவு- கேசுரேன் - கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயம் (முதலாம் இடம்), தர்ப்பணா ஸ்ரீ மகாதேவன் - யாழ். இந்து மகளிர் கல்லூரி (இரண்டாம் இடம்), அஜந்தாயினி சற்குணரட்ணம் (வேம்படி மகளிர் கல்லூரி (மூன்றாம் இடம்).

**கதை எழுதுதல்**

மத்திய பிரிவு- இரங்கநாதன் கோகுலநாத் - புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி (முதலாம் இடம்), தர்ஷனா குகதாஸ் - வேம்படி மகளிர் கல்லூரி (இரண்டாம் இடம்), எஸ்.அருள்ஜோதி கொட்டடி நமசிவாய வித்தியாலயம் (மூன்றாம் இடம்)

மேற்பிரிவு- டயானா அன்ரனி - யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் (முதலாம் இடம்), ஷர்மினி விக்னேஸ்வரன் - யாழ்.இந்துமகளிர் கல்லூரி (இரண்டாம் இடம்), நாகேஸ்வரசர்மா சிவ மனோகரன் - கொக்குவில் இந்துக் கல்லூரி (மூன்றாம் இடம்). (க-10)

## ஆலயத்தில் திருட்டு

நெல்லியடி,பெப்.28

பட்டப்பகல் வேளை வழிபாட்டுக்காக ஆலயக் கதவு திறந்திருந்த சமயம் அங்கு உட்புகுந்த திருடர்கள், அங்கிருந்த 20 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்களை திருடிச் சென்றார்கள்.

இச்சம்பவம் கடந்தவாரம் பூலோலி தெற்கு புனித சூசையப்பர் ஆலயத்தில் இடம்பெற்றுள்ளது.

இத்திருட்டுக் குறித்து ஆலய நிர்வாகத்தினர் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (உ-109)

## வீட்டில் திருட்டு

நெல்லியடி,பெப்.28

வீட்டில் உள்ளோர் உறங்கிய சமயம் அங்கு கதவு பிரித்து உட்புகுந்த திருடர்கள், உடுபுடவைகள், கஸட் ரேப் செற் உட்பட 37 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிக் கொண்டு தலைமறைவானார்கள்.

இத் திருட்டுச் சம்பவம், கடந்த 2 ஆம் திகதி இரவு வதிரி, யாவத்தையில் உள்ள க.எதிர்வீரசிங்கம் என்பவரின் வீட்டில் இடம்பெற்றது.

இது குறித்து, நெல்லியடிப் பொலீஸ் நிலையத்தில் புகாரிடப்பட்டுள்ளது. (ஐ-109)


**பாலர் முன்பள்ளி ஆசிரியராகப் பயிற்சி**

தபால் வழியில் ஆறு மாதப் பயிற்சி வழங்கல்.
கடைசித் தகைமை க.பொ.த. (சாதாரண தரம்)

விவரங்களுக்கு:-
பாலர் ஆசிரியர் சங்கம்,
கொக்குவில்.

(84434)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

# முதலாம் ஆண்டு நீங்கா நினைவலைகள்



## அமரர் சிவக்கொழுந்து சீனிவாசகம்

(உரிமையாளர், சீனிவாசகம் நகைத் தொழிலகம், கஸ்தூரியார் வீதி, யாழ்.)

அவனியில் 25.07.1934 — அமரனடியில் 10.03.2000

திதி:28.-02.2001 (பூர்வபட்ச பஞ்சமி)

*எமதருமை அப்பாவே!*
*அன்பாலும் பண்பாலும் பாரினில் உயர்ந்து நின்று*
*கண்ணிமை காப்பது போல் எமைப் பேணிக் காத்தீர்கள்!*
*மண் வீட்டு விண் தொட்டு நீங்கள் சென்றீர்கள்!*
*கண்கொட்டும் நீர் சிந்தி மனம் நொந்து நாமிருக்க*
*புண்பட்டு நாமிங்கு எண்ணி நிதம் ஏங்கி நிற்க*
*நீங்கள் விண்ணடைந்து ஓராண்டு ஆனதப்பா!*
*ஓராயிரம் ஆண்டானாலும் ஆறாது எம்மனம்; அடங்காது எம் உள்ளக் குமுறல்!*

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இன்று (28.02.2001) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


என்றும் உங்கள் நினைவில் வாழும்
அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*62. புதிய செம்மணி வீதி,*
*நல்லூர் வடக்கு,*
*யாழ்ப்பாணம்.*
(84646)


**I.B.S** கண்டிக்குளி/ கோயில் வீதி.

தரம் 3 முதல் O/L வரை
புதிய அனுமதிகள்
வழங்கப்படுகின்றன.
மீட்டலுடன் பரீட்சையும்
ஆரம்பம்:
01.03.2001 3p.m.


# வாழ்த்தி மகிழ்கின்றோம்



வடமராட்சி கிழக்கு, உடுத்துறையைச் சேர்ந்த

## திரு.பொன்னையா சங்கரப்பிள்ளை (ஜே.பி)

(முன்னாள் அதிபர், யாழ்/உடுத்துறை மகாவித்தியாலயம்)

அவர்கள் நீதி, அரசியல் அமைப்பு விவகார அமைச்சினால் சமாதான நீதிவானாக 05.02.2001 அன்று யாழ்.மாவட்ட நீதிவான் திரு.ஆர்.ரீ.விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

உடுத்துறை மகாவித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், முல்/உடையார்கட்டு மகாவித்தியாலயம், யா/மருதங்கேணி இந்து வித்தியாலயம், யா/உடுத்துறை மகாவித்தியாலயம் ஆகியவற்றின் முன்னாள் அதிபருமாவார்.

இவர் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை அபிவிருத்திச் சபை, வடமராட்சி கிழக்கின் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் ஓய்வூதியம் பெறுவோர் நலன்புரிச்சங்கம் ஆகியவற்றின் தலைவரும், வடமராட்சி கிழக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தின் உப தலைவரும், பளை லயன்ஸ் கழகம், வடமராட்சி வலயக் கல்வி அபிவிருத்திக்கழகம் ஆகியவற்றின் நிர்வாக உறுப்பினருமாவார்.

வடமராட்சி கிழக்கின் சிறந்த அதிபராக மருதங்கேணி கல்விக் கோட்டத்தினாலும் யாழ்.கல்வித்திணைக்களத்தினாலும் தெரிவு செய்யப்பட்டு பாராட்டைப் பெற்ற இவர், பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் நீண்ட காலமாக நெறியாளர் குழு உறுப்பினராக இருந்து இந்த இரு சங்கங்களின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக விளங்கினார். மேலும் இவர் ஒரு சிறந்த கூட்டுறவாளரும் சமூக சேவையாளருமாவார்.

இவரது சேவை தொடர்ந்து சிறப்புற வேண்டுமென வாழ்த்தி மகிழ்கின்றோம்.

*மருதங்கேணி,*
*வடமராட்சி கிழக்கு.* (84544)

- வடமராட்சி கிழக்கு வாழ் மக்கள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்

தாயின் மடியில் 11 - 08 - 1936



இறைவன் அடியில் 29 - 01 - 2001

## அமரர் வல்லிபுரம் பூபாலு (மேசன்)

திதி: தைமாத பூர்வபக்க பஞ்சமி

எமது குடும்பத் தலைவனாய், அன்புடனும் பாசத்துடனும் எம்மைப் பேணிக் காத்து எம் நல்வாழ்வுக்கு வழிகாட்டித் தெய்வமாகிய உத்தமரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (28. 02. 2001) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்நாளில் அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

*குஞ்சர் வளவு,*
*கரணவாய் மத்தி,*
*கரவெட்டி.* (84611)

*பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# வடக்கு - கிழக்குக்கு மட்டும் அடக்குமுறைச் சட்டங்கள் ஏன்?

## ஓய்வுபெற்ற நீதிபதி கேள்வி

**1996, 97 காலப்பகுதிகளில் காணாமல்போனோரின் குடும்பங்களைச் சேர்ந்த சிறார்களுக்கு உதவும் நிகழ்வு ஒன்று அண்மையில் யாழ்.பல்கலைக்கழக வவுனியா மாவட்ட மாணவர் ஒன்றியத்தினால் கைலாசபதி கலையரங்கில் நடத்தப்பட்டது.**

**வவுனியா மாவட்ட மாணவர் ஒன்றியத் தலைவர் வி.கேசவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஒய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு மற்றும் கியூடெக் இயக்குநர் வணபிதா ஜெயக்குமார், யாழ்.பல்கலைக்கழக நுண் கலைத்துறை விரிவுரையாளர் எஸ்.சிதம்பரநாதன் ஆகியோர் ஆற்றிய உரைகள் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றன.**

### ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு

இலங்கை ஒரு சுதந்திரம் பெற்ற நாடு; மனித உரிமைகள் மதிக்கப்படுகின்ற, ஜனநாயகம் தழைத்தோங்கிய ஒரு நாடு என உலகுக்குக் காட்ட முயல்கிறது தற்போதைய அரசு. இலங்கையில் 7 மாகாணங்களையும் பொறுத்தமட்டில் இது பொருத்தமானதாக இருக்கும். நான் 12 வருடம் நீதிபதியாக இருந்த அனுபவத்தில் கூறுகின்றேன். எமது வடக்கு - கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தமட்டில் இது பொருத்தமற்றது; சட்டத்திற்குப் புறம்பானது.

யாழ்ப்பாணத்துத் தமிழன் இரவில் கதவுகளைப் பூட்டிவிட்டு அறைகளுக்குள் முடங்கி விடுகின்றான். இந்த சாபக்கேட்டை அனுபவிக்கும எம்மால் இதைப் புரிந்துகொள்ள முடியாது. இது தொடர்பாக சிந்திக்க அவசரகாலச் சட்டமும் தடைபோட்டு விட்டது. காலம் காலமாக இப்படியான சூழ்நிலைகளுக்குள் வாழும் நாம் இதையெல்லாம் பெரிதுபடுத்துவதில்லை. இதில் இருப்பவர்களில் எவராவது இது குறித்து சிந்தித்தீர்களா? நாம் ஏன் 8 மணிக்கே வீட்டுக்குள் அடைக்கப்படுகின்றோம் என்று எவருக்காவது காரணம் தெரியுமா?

ஊரடங்குச் சட்டத்தை ஏன் இவ்வளவு நீண்ட நாள்களுக்கு அமுல படுத்துகிறார்கள்? மனித உரிமைகள் என்று அடிக்கடி கூறும் அரசு இந்த மனித உரிமைகளிலேயே மிகப்பெரிய மனித உரிமை மீறலை ஆண்டுக்கணக்காக அமுல் படுத்தியிருக்கிறது. இந்த அடக்குமுறையைப் பற்றி நம்மில் எவராவது சிந்தித்தோமா?

எந்த மாகாணத்திலும் இல்லாத சட்ட திட்டங்கள் எமக்கு மட்டும் ஏன் போடப்படுகின்றன? இன்று இரு அடையாள அட்டைகளும் இல்லாமல் இங்கு எவரும் நடமாடமுடியாது. அந்த அடையாள அட்டைக்கும் இப்போது வேறு கருத்துக் கூறப்படுகின்றது. முன்னர் ஆளை அடையாளம் காட்டும் அட்டையாக அது இருந்தது. இப்போது ஆளை 'அடை' என்று இராணுவத்தினருக்கு உரிமை கொடுக்கும் அட்டையாக அது மாறிவிட்டது. இதனால்தான் அடையாள அட்டையுடன் சென்றாலும் பலர் கைதுசெய்யப்பட்டு அடைக்கப்படுகின்றனர்.

எனக்கு இன்றும் ஞாபகம் இருக்கிறது. இதே பல்கலைக்கழக மாணவர்களால் இந்த மேடையில் நடித்துக் காட்டப்பட்ட ஒரு நாடகத்தில் அவசரமாக மலசலகூடம் போகும் ஒருவனை வழிமறித்த இராணுவ வீரர் ஒருவர் அடையாள அட்டையைக் கேட்டு வாங்கிக்கொண்டு 'எங்கே போகின்றாய்?' எனக் கேட்கிறார். மலசலகூடத்துக்குப் போவதற்குக்கூட இராணுவத்தினரது அனுமதி தேவை என்பதை அந்த நாடகம் சித்திரித்துக்காட்டியது. இந்த நாட்டில் நடைபெறும் அநீதிகளை, மனித உரிமை மீறல்களை, அந்த நாடகத்தின் மூலம் மாணவர்கள் இரண்டு நிமிடத்தில் எமக்கு இலகுவாகச் சுட்டிக்காட்டினார்கள்.

எமது நாட்டில் பேச்சுச் சுதந்திரம் இருக்கிறது என்று சட்டப் புத்தகம் கூறுகிறது. அது சட்டத்தில் மட்டுமதான் இருக்கிறது. இன்று ஒருவர் இந்த மேடையில் உரத்துப் பேசிவிட்டால் அவரது நிலைமை உங்கள் எல்லோருக்கும் தெரியும். ஏன் இன்று நான்கூட வெருக்கும் எதிராகப் பேசிவிட்டால் நாளை எனக்கு என்ன நடக்கும் என்பதே தெரியாது. இதுதான் எமக்கு இங்கே தரப்பட்டுள்ள பேச்சுச் சுதந்திரம். இதே போல்தான் எமக்கு எழுத்துச் சுதந்திரமும் தரப்பட்டுள்ளது. இதுவும் எமது சட்டப் புத்தகத்தில் தெளிவாக இருக்கிறது. ஆனால் பத்திரிகைகளிலோ நூல்களிலோ உண்மைகளை எழுதினால் அவருக்கு என்ன நடக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். அவ்வாறு எழுதியவருக்கு என்ன நடந்தது என்பதும் உங்களுக்குத் தெரியும்.

நடமாடும் சுதந்திரமும் சட்டப்புத்தகத்தில் இருக்கிறது. அதற்கும் மேலாக அவசர காலச்சட்டம் சில உரிமைகளைக் கொடுத்திருக்கிறது. 'நடமாடினால் பிடி, அதற்குக் கேள்வி இல்லை, இரவிலும் பிடிக்கலாம், பகலிலும் பிடிக்கலாம், வீட்டிலும் பிடிக்கலாம், றோட்டிலும் பிடிக்கலாம், சொன்னாலும் பிடிக்கலாம், கேட்டாலும் பிடிக்கலாம்.' இப்படியாக எமது அந்தச் சுதந்திரமும் பறிக்கப்பட்டுவிட்டது.

**- வதனன் -**

ஆனால் இவை எல்லாம் சட்டப்புத்தகத்தில் பக்கம் பக்கமாக இருக்கின்றன. ஆனால் இறப்பதற்கு மட்டும் எமக்கு சுதந்திரம் தந்திருக்கிறார்கள். பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள்; நேரில் கண்டிருப்பீர்கள். யாழ்.ஆஸ்பத்திரியில் '10 சடலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன; 5 சடலங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன' என்று. இவ்வாறு இறந்தவர்கள் தொடர்பாக நீதிபதி என்ற முறையில் நான் ஆஸ்பத்திரிக்குச் சென்று விசாரித்தேன்.

### மரண விசாரணை இல்லையா?

அங்கு அவர்கள் சொன்னார்கள் 'உடல்கள் பொலித்தீன் பைகளில் பொதி பண்ணப்பட்டு வருகின்றன. அதை நாம் பிரேத அறையில் வைக்கிறோம். பின்னர் அவர்களே வந்து வாங்கிச் சென்று விடுவார்கள். அல்லது அரச செலவில் அவற்றை நாம் அடக்கம் செய்கின்றோம்' என்று கூறுகின்றார்கள். ஆனால் சட்டத்தில் இதற்கு அனுமதி இல்லை. ஒருவன் இறந்தால் மரணவிசாரணை செய்ய வேண்டும். அது யாராக இருந்தாலும் சரி. இறந்த மனிதனும் ஓர் இலங்கைப் பிரஜைதானே! அவனுக்கு மரண விசாரணை இல்லையா?

இறந்தவன் யார்? எப்படி இறந்தான்? எதனால் இறந்தான்? எங்கு இறந்தான்? அதற்கு பின்னணி இருக்கிறதா? இவை எல்லாம் எவருக்குமே தெரியாது. இப்படிக் கொண்டு வரப்படும் சடலங்களை அடையாளம் காண முடியவில்லை என்று கூறிவிட்டு பண்ணைப்பகுதியில் கொண்டு போய் கை, கால்கள் வெளியில் தெரியக் கூடியவாறு புதைத்து விடுகிறார்கள்.

அவற்றை அங்கு திரிகின்ற நாய்கள் கடித்து வெளியில் இழுத்துப் போடுகின்றன. இப்படி எத்தனை முறைப்பாடுகள் எனக்கு வந்துள்ளன. இவர்களுக்கு எப்படி இறப்புச் சான்றிதழ் கொடுப்பது? வயோதியர்கள் இறந்தாலே பிரேத பரிசோதனை செய்கின்றோம் மரண விசாரணை மேற்கொள்கின்றோம். ஆனால் இவற்றுக்கு மட்டும் ஏன் இவை எல்லாம் செய்வதில்லை?

மரத்தால் வீழ்ந்து இறந்தவனையும், மதில் வீழ்ந்து இறந்தவனையும், மருந்து குடித்து இறந்தவனையும் மட்டும் தான் நான் ஆஸ்பத்திரிக்குச் சென்று மரணவிசாரணை செய்கின்றேன். இதற்குத்தான் மரணவிசாரணைச் சட்டமா? ஏனையவர்களுக்கு இல்லையா? சந்தேகத்தின் பேரால கைது செய்யபடுபவர்கள் ஏன் முன் ஆஜர்படுத்தப்படுன்றார்கள். இவர்கள் தொடர்பாக அவர்கள் என்னிடம் கூறுவது இதைத்தான். 'சந்தேகத்தின் பேரில் கைது; விசாரணை செய்யவேண்டும்; விளக்க மறியலில் வைக்க உத்தரவிடுங்கள்.' இது கூடச் சிங்களத்தில்தான் இருக்கும். இவர்கள் மீது எந்தக் குற்றம் சுமத்தப்படுகிறது என்பது கூட எமக்குத் தெரியாது.

அவசரகாலத் தடைச்சட்டத்தின் கீழ் மூன்று அல்லது ஆறு மாதம் அவர்களை விளக்க மறியலில் வைககின்றார்கள். பிறகு அவர் மீது எந்தக்குற்றமும் சுமத்தப்படவில்லை என்று தெரிவித்து சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்றுள்ளதால் விடுதலை செய்யுமாறு கோருவார்கள். அதன்படி நான் விடுதலை செய்கின்றேன். பிள்ளை விடுதலையானதும் உறவினர்கள் அவரைக் கட்டியணைத்து முத்தமிட்டு அழைத்துச் செல்கிறார்களே தவிர 'இவரை ஏன் கைதுசெய்தார்கள்? எதற்காக அடைத்து வைத்திருந்தார்கள்?' என எவரும் கேள்வி கேட்பதில்லை. இந்த நிலை தொடர்கதையாகவே இருக்கின்றது. உலகின் வேறெந்த நாட்டிலும் இல்லாத தொடர்கதை.

### அன்றைய நிலை இதுவா?

இவற்றை எல்லாம் பார்க்கின்ற பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட அனைவரும் இந்த நாட்டு நிலைமை காலம் காலமாக இப்படித்தான் இருந்திருக்கிறது என்று எண்ணி விடுகின்றார்கள். தமிழினம் அன்று இப்படி வாழ்ந்ததில்லை. எழுச்சி கொண்டவர்களாக, சுதந்திரம் உடையவர்களாக, வீரம் செறிந்தவர்களாக, ஒற்றுமையுடன் வாழ்ந்த தமிழினத்தின் வரலாற்றை நான் இங்கு உங்களுக்கு ஞாபகப்படுத்துகின்றேன்.

காலம் காலமாக இந்தத் துன்பங்கள் எம்முடன் தொடரவில்லை. அதை நீங்கள் உணர வேண்டும்.

தமிழர்கள் காணாமற்போவது 1996 - 97 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தான் நடந்திருக்கிறது என்று கூறுகிறார்கள். இதைப்பற்றி எவராவது சிந்தித்தீர்களா என்பதுதான் எனது கேள்வி.

இன்று இந்த இளைஞர்கள் சிந்தித்திருக்கிறார்கள்.

வயது வந்தவர்கள் இறந்ததும் கண்ணீர் அஞ்சலியும் கல்வெட்டுக்களும் என கொள்ளிவைக்க இங்கு இல்லாத பிள்ளைகள் கூட வெளிநாடுகளில் இருந்து கொண்டு பத்திரிகை மூலம் விளம்பரம் செய்கிறார்கள். இங்கு இறந்தவர்களுக்கு பக்கத்து வீட்டுக்காரன் கொள்ளிவைக்கிறான். இன்னொருவன் செலவு செய்கிறான்.

வெளிநாட்டில் இருந்து இறந்தவரின் பிள்ளை அனுப்பும் காசுக்கு இருவரும் சண்டைபிடித்துக்கொண்டு பங்குபோட நீதிமன்றம் வருகிறார்கள். இந்த நிலைமைதான் இன்று இங்கு காணப்படுகின்றது.

இவ்வாறு இறந்தவர்களின் கிரியைகளுக்கு செலவு செய்பவர்கள் எவராவது காணாமல்போனவர்களைப் பற்றிச் சிந்திக்கிறார்களா? அவர்களது குடும்பங்களுக்கு உதவி செய்ய முன்வந்திருக்கின்றார்களா?

(12ஆம் பக்கம் பார்க்க)



காணாமற்போனோரின் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு உதவி வழங்கும் நிகழ்வு யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சமயம் எடுக்கப்பட்ட படம்.

காணாமற்போனோர் குடும்பத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் மங்களவிளக்கேற்றுகிறான்.

# தவக்காலம் இம்முறை சமாதானத்துக்கான காலம்

**கிறிஸ்தவ மக்களால் அனுஷ்டிக்கப்படும் நோன்பு காலமான தவக்காலம் இன்று ஆரம்பமாகின்றது. அதனை ஒட்டி இக்கட்டுரை வெளியிடப்படுகிறது.**

1980ஆம் ஆண்டு சமாதானத்துக்கான நோபல் பரிசுபெற்ற அடல்போ பேரஸ் எஸ்குவேல், 1982ஆம் ஆண்டு தவக்காலம் தொடங்கும் போது - 'சர்வதேச செபமும் - நோன்பும்' என்ற தவக்கால வழிபாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தார். அவ்வழிபாட்டில் அவர் கூறிய முக்கிய செய்தி எதுவெனில்.....

"தவக்காலத்தில், சிறப்பாக ஜேசு எவ்வாறு நாற்பது நாள்களாக நோன்பு இருந்து ஜெபித்து அலகையின் சோதனையில் இருந்து வெற்றி கண்டாரோ, அதுபோல் நாமும் சமாதானத்துக்காக - நோன்பிருப்போம்" என்று கூறி மக்கள் அனைவரையும் அவ்வழிபாட்டில் ஒன்றிணையச் செய்தார்.

ஆண்டாண்டு காலமாக வந்து போகும் தவக்காலமாக இம்முறையும் கடந்து செல்லாமல் எமது நாடு எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் சவால்களையும் பிரச்சினைகளையும் எம் உள்ளங்களில் நிறுத்தியவர்களாக இக்காலத்தை பொருள் நிறைந்த முறையில் பயன்படுத்த அழைக்கின்றோம்.

தவக்காலம் ஒரு தனிக்காலம். தன்னிகரற்ற காலம். இறைவன் நம் அருகில் உள்ள காலம். இறைவனிடம் நாம் திரும்பி வருவதற்கு ஏற்ற காலம். தனிமனித மாற்றம் மட்டும் அல்ல மாறாக தன்னலப் பார்வை களைந்து - சமூக நோக்கு விரிய உடைந்து, உருக்குலைந்த எம் சமூகத்தை உருவாக்க - என்னை அர்ப்பணிக்க அழைக்கிறது தவக்காலம்.

அக்கிரமத்தின் சங்கிலிகளை அறுத்துவிடு. அழுத்தியிருக்கும் நுகத்தடிகளை அறுத்துவிடு. *பசித் திருப்பவனுக்கு பகிர்ந்து கொடு.* ஏழைகளுக்கு உன் வீட்டில் இடம் கொடு; ஆடையில்லாதவனை போர்த்து, *முகவாட்டம் காணாது நோன்பிரு. இறைவனோடு ஒன்றித்திரு.*

ஆண்டவராகிய கடவுள் இசையால வாய் மொழியாக கூறிய வார்த்தைகள்... புரட்சி தெரிகிறதல்லவா? கடவுள் புரட்சிதான். கிறிஸ்தவ ஆன்மீகத்திற்கு உயிரூட்டுபவை தவக்கால அடையாளச் சடங்குகள். ஆழ்ந்த இறையியல் அம்சங்களையும், சமூக நோக்கையும் உள்ளடக்குகிறது தவக்காலம்.

நம் சமூகத்தில் நடந்துகொண்டிருக்கும் நடப்புக்கள் இந்தத் தவக்காலத்தில் மிகவும் ஆழமாக உணரப்பட வேண்டும். பசி பட்டினியால்

**றெக்ஸ் கொன்ஸ்ரன்ரைன்**

உழன்றுகொண்டிருக்கும் மக்களையும் இருக்க இடமில்லாமல் அலைந்து திரியும் மக்களின் தேவையையும், கொடிய போரின் வடுக்களையும் உள்ளத்தின் சிலுவைகளாக ஏற்றி சுமந்து செல்லுகின்ற காலமாகத்தான் இத் தவக்காலம் எமக்கு அமைகின்றது. இந்தத் துன்பங்கள் எல்லாம் எமக்கு சமாதானத்தை பெற்றுத் தரப்போகின்றது. சமாதானத்திற்கான நோன்பு எம்மில் மலர வேண்டும். அதற்குத் தான் யோவேலும் இன்று எமக்கு அழைப்பு விடுக்கிறார்.

"இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து அழுது புலம்பிக் கொண்டு உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பிவாருங்கள் - என்கிறார் ஆண்டவர். நீங்கள் உங்கள் உடைகளை கிழித்துக்கொள்ள வேண்டாம். இதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்"

(யோவேல் 2:12-13).

இந்த மாபெரும் அழைப்பை ஏற்றவர்களாக, நாம் ஒவ்வொருவரும் எம் குற்றங்களுக்காக அழுது புலம்பி, நோன்பிருந்து செபிக்க வேண்டும். இக் காலத்தில் அன்பு நம் வாழ்வில் சிறப்பிடம் பெற வேண்டும். சண்டை சச்சரவுகள், மனத்தாங்கல்கள், பகை விரோதம் இவற்றைவிடுத்து அனைவரும் இறைவனின் பிள்ளைகள், சகோதரர்கள் என்ற உணர்வு நம்மில் முதலிடம் பெறவேண்டும்.

ஆக நோன்பும், செபமும் தான், கடவுளின் உள்ளத்தில் குடி கொள்ள மிக அருமையான வழி. அதாவது எம் செபத்தில் கடவுளின் விருப்பத்தை மாற்றுவதல்ல மாறாக இக் காலத்தில் எம்மை ஒருநிலைப்படுத்தவும் - அவருக்கு செவிமடுக்கவும் ஒப்புரவு கொள்ளவும் வைக்கின்றது. நோன்பிருப்பது செபத்தின் முதல்நிலை. கடவுளின் அன்பை அதிகமாக உணரவைத்து எம் வாழ்வை விழிப்புணர்வடையச் செய்கிறது. அத்தோடு முற்றும் முழுவதுமாக கடவுளைப் பற்றியிருக்கவும் அவர்வழி நடந்து சமாதானத்தின் தூதுகளாக மாற இத் தவக்காலம் அருள்புரிய ஆண்டவன் அருள்பாலிப்பாராக! ★

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சிறந்த முறையில் பாவனையில் இருக்கும் **CANON 6016 PHOTO COPY** (போட்டோப் பிரதி) மெசின், அத்துடன் **VEDIO PROJECTOR 500** அங்குலம் **(30')** திரை **SHARP** மெசின் விற்பனைக்குண்டு. எந்த நேரமும் பார்வையிடலாம். தொடர்பு: **S.K.** நல்லதம்பி, அச்சுவேலி. **T.P.**070-212223, 070-212678 (84631)

இரண்டு மாதம் நிரம்பிய நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு: பூதத்தம்பி, 'கிருஷ்ணபவான்' டச்றோட், சங்குவேலி வடக்கு, மானிப்பாய். (84674)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

**BROILER** மற்றும் இறைச்சிக்கோழி சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (84504)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

நல்ல இன **DOBERMANN PINCHER** நாய்க்குட்டிகளும், **DASHOUND** நாய்க்குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (84694)

## புறொயிலர் விற்பனைக்கு

**Broiler** மற்றும் இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (84692)

## தொலைபேசி தேவை

தொலைபேசி விற்க விரும்புவோர் உடன் எம்மிடம் விலை, விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: க.கேசவன், 182, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (84698)

## காணி விற்பனைக்கு

மானிப்பாய், ஆலடிச் சந்திக்கு அருகில் மெயின் றோட்டில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **K.**நடராசா, **VSK** மானிப்பாய்.(84702)

## மணப்பெண்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டனில் பிரஜா உரிமை பெற்று, நிரந்தர உத்தியோகம் பார்க்கும் சகோதரர்கள் இருவருக்கு வயது 33 (உயரம் 5'4"), வயது 32 (உயரம் 6'2") **G.C.E. A/L** படித்த, ஆங்கில அறிவுடைய, அழகிய மணப்பெண்கள் தேவை. உடன் ஸ்பொன்சரில் அனுப்பலாம். தொடர்புகளுக்கு:- கு.பரமேஸ்வரன், **13/6,** மூத்தவிநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம். (84695)

---

# சென்ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.

## பழைய மாணவர் சங்கம்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நகர பிதாவாகத் தெரிவு செய்யப்பட்ட

**திரு.ந.ரவிராஜ்** அவர்களை

கௌரவித்து நடைபெறும் விருந்துபசாரம்.

*இடம்:* **சென்ஜோன்ஸ் கல்லூரி, பீற்றோ மண்டபம்.**

*காலம்:* 01.03.2001 வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணி.

பழைய மாணவர்கள் அனைவரையும் துணை சகிதம் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்.**

(C/15491)

---

# இவரைக் கண்டீர்களா?

**வினாசித்தம்பி கணேசபிள்ளை (துரை)**

என்பவரைக் கடந்த (22.02.2001) வியாழன் முதல் காணவில்லை. வயது எண்பது (80). பொது நிறம். கட்டையான தோற்றம். கடைசியாகப் பச்சையில் கோடு விழுந்த சாரமும் வெள்ளை ரீ-சேட்டும் அணிந்திருந்தார். தன்னைப் பற்றிய விவரங்களைக் கூறமுடியாதிருப்பார். இவரைப் பற்றிய விவரம் தெரிந்தோர் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்; சன்மானம் வழங்கப்படும்.

**திரு.சி.கனகசபாபதி,**
அரசடி - அம்மன் வீதி,
திருநெல்வேலி வடக்கு.

(84712)

---

# மரண அறிவித்தல்

## திருமதி கனகம்மா வினாசித்தம்பி

மண்கும்பானைச் சேர்ந்தவரும் தற்சமயம் வன்னேரியில் வசித்தவருமாகிய திருமதி கனகம்மா வினாசித்தம்பி 07.02.2001 இல் வன்னேரியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல புகையிலை வியாபாரி வினாசித்தம்பியின் அன்பு மனைவியும், அன்னலட்சுமி, பத்மநாதன், காசிலிங்கம், சாந்தலிங்கம், படிகலிங்கம் சந்திராதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், திருநாவுக்கரசு, லில்லிமலர், பரமேஸ்வரி, தங்கநாயகி, கருணாதேவி, ஞானசம்பந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வன்னேரியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தகவல்:*
**வி.காசிலிங்கம்** (கொக்குவில்)
**வி.சாந்தலிங்கம்** (கலட்டி)
**வி.படிகலிங்கம்** (மண்கும்பான்)
**பிள்ளைகள்**

*பொற்பதி வீதி,*
*கொக்குவில்.* (84706)

---

## ப.நோ.கூ.சங்க தலைமையகத்திற்கு மாடிக் கட்டடம்

யாழ்ப்பாணம், பெப்.28

புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.சங்கம் அதன் தலைமைச் செயலகக் கட்டடத்தில் மேல் மாடியை அமைக்கஉள்ளது.

இந்த மாடிக்கட்டடம் களஞ்சிய அறைகளைப் பாதுகாக்கும் நோக்குடனும் கேட்போர் கூடம் அமைக்கும் பொருட்டும் மிக விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் டாக்டர் க. இராஜரட்ணம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் புங்குடுதீவுப் பகுதிக்கு சங்கத்தில் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (க)

## வருகை தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.28

கைதடிப் பகுதிப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அனைவரையும் நாளை வியாழக் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு மருதனார்மடத்தில் உள்ள சாவகச்சேரி கல்விகோட்ட அலுவலகத்துக்கு வருமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம)

## 'பசாம்' ஒலி நாடா இன்று வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.28

யாழ்.திருமறைக் கலாமன்றத்தால் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு வியாகுல பிரசங்கம் (பசாம்) என்ற கிறிஸ்துவின் பாடுகள் அடங்கிய ஒலிநாடா மன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளது.

தவக்காலத்தை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள இந்த ஒலிநாடா திருமறைக் கலாமன்றத்தால் இவ்வருடத்தில் வெளியிடப்படும் முதலாவது இசை நாடாவாகும். இதனை சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்ளும் அருட்தந்தை செல்வராஜா வெளியிட்டு வைப்பார்.

அதனைத் தொடர்ந்து யாழ்.திருமறைக் கலாமன்றத்தால் வருடந்தோறும் நடத்தப்படும் நாடகப் பயிலக அரங்கு இடம்பெறும் என்றும்-

நாடகம் தொடர்பான பயிற்சிகளை பெற விருப்பமுடைய 53 மாணவர்களுக்கு இம்முறை ஒரு வருட பயிற்சி வழங்கப்படவுள்ளது. பயிற்சியின் இறுதியல் சான்றிதழ்களும் வழங்கப்படும். (க-6-ரி)

## கைதடி வணிகர் கழகக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.28

கைதடி வணிகர் கழகக் கூட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 2மணிக்கு கைதடி ஸ்ரீசச்சிதானந்தா ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ளதால், கைதடி வர்த்தகர்கள் அனைவரையும் கூட்டத்துக்கு சமூகமளிக்குமாறு வணிகர்கழகத் தலைவர்இ.குழந்தைவடிவேல் அழைப்பு விடுத்துள்ளார். (க-5)

---

# A/L - 2001
# DAY CLASSES

மீட்டல்

வினா -விடை

வகுப்புகள் ஆரம்பம்:

28.02.2001~8மணி

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி – யாழ்நகர்.

(84665)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
1918
-
02
-
05



மறைவு
2001
-
01
-
29

## திருமதி
## இராசம்மா தாமோதரம்பிள்ளை

"அன்பினால் அரவணைத்து அரிய வாழ்வு காட்டி
இன்பமாய் நாம் வாழ உலகத்தை உணர்ந்திட்ட தாய"

உன் உடல் வெந்து இன்று ஒரு திங்கள் கடந்ததம்மா!
என்ன செய்வோம் நாமிருந்து உங்கள் நினைவில்
ஏங்குகின்றோம்.
எங்கள் குடும்ப விளக்காய் நால்வராய்த் திகழ்ந்து
எமக்கு நல்லன்னையாய், எண்ணிரண்டு செல்வங்களின்
பேர்த்தியாய்
இந்த மண்ணில் எம்மோடு எண்பத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்து
பதின்மூன்று பூட்டிகளையும் பெற்ற பெருமையில் நிறைந்த
திருமதி இராசம்மா தாமோதரம்பிள்ளை
சிவன் கழலிணைந்து ஒரு திங்கள் இன்றுடன் நிறைகிறது.

*அன்புக்கினிய அம்மாவின் மறைவில் நாமடைந்த சோகத்தில் இணைந்து இறுதிக்கிரியைகளில் கலந்து உதவிகளும் பல ஆற்றி அனுதாபம் தெரிவித்த அத்தனை அன்பு உள்ளங்களுக்கும் எமது இதமார்ந்த நன்றிகள். அத்துடன் கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும், எம் குடும்ப அன்பர்கள் அனைவருக்கும் குறிப்பாக இன்றைய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பித்த அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன்.*

"சங்கீதா"
*163, கே.கே.எஸ்.வீதி,*
*கொக்குவில்.*

**திருமதி க.தேவராஜா**

(84701)

---

# ACTION CONTRE LA FAIM
# ADMINISTRATIVE ASSISTANT

ACTION CONTRE LA FAIM

An International NGO working in Jaffna Peninsula, invite applications from suitably qualified persons to fill the above vacancy.

The ideal candidate should have intermediate qualifications in a recognized accountancy body and having 2-3 years experience in book keeping, Computer literacy and fluency in English language is essential. Preference will be given to applicants who have held a similar position at an INGO.

**Please apply within 10 days to:**

**Programme Manager - Logistic,**
**Action Contre La faim,**
**5, Rakka Road,**
**Jaffna.**

(C-15488)

---

THE EXPRESS INSTITUTE KOPAY
A BOON TO STUDENTS

# A/L 2003

## கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்.

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன

- சனி,ஞாயிறு வகுப்புகள்
- வார நாள்களில் விஷேட மேலதிக வகுப்புகள்
- மாதாந்த பரீட்சைகளும் மீட்டலும்
- அனுபவம் முதிர்ந்த பட்டதாரிகளின் போதனை
- 30 மாணவர்களை மட்டும் கொண்ட வகுப்புகள்
- ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த கட்டமைப்பு

- அதிபர்.

## இந்தியாவின் மேற்கு வங்கத்தில்

# சிகிச்சையளித்த மருத்துவரை பலி கொண்ட மர்ம நோய்!

கொல்கத்தா, பெப். 28

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தின் எல்லைப் புற நகரான சிலிகுரியில் அடையாளம் காணப்படாத நோய்க்கு இதுவரை மருத்துவர் ஒருவர் உட்பட 32 பேர் பலியாகி உள்ளனர்.

நுளம்புகள் மூலம் பரவுவதாகக் கருதப்படும் இந்த நோயின் அறிகுறியாக அதிக காய்ச்சல் ஏற்படுவதாகவும், அதனையடுத்து நோயாளி இறப்பதாகவும் கூறப்படுகிறது.

சிலிகுரி மருத்துவ மனையில் இந்த மர்ம நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளித்து வந்த மருத்துவர் ஒருவரும் இதே நோய் தாக்கி இறந்துள்ளார்.

இதனையடுத்து மக்கள் பயத்தின் காரணமாக நகரை விட்டு வெளியேறி வருவதாகக் கூறப்படுகிறது. (ஒ)

## ஜோதிபாசுவுக்கு பிரியாவிடை

கொல்கத்தா, பெப். 28

மேற்கு வங்கச் சட்டப் பேரவையில் 55 ஆண்டுகளாக உறுப்பினராகவும், அதில் 24 ஆண்டுகள் முதல்வராகவும் பதவி வகித்து தற்போது அரசியலில் இருந்து விலகியுள்ள கம்யூனிஸ்ட் தலைவர் ஜோதிபாசுவுக்கு மேற்கு வங்க சட்ட சபை கடந்த சனிக்கிழமை பிரியாவிடை அளித்துக் கௌரவித்தது.

87 வயதாகும் ஜோதிபாசு சட்டசபை உறுப்பினராக கலந்து கொள்ளும் பேரவையின் கடைசிக் கூட்டத்திலேயே இந்த வைபவம் இடம்பெற்றது. (ஒ)

## கஞ்சாவை மூலிகையென அங்கீகரிக்க ஆய்வு

வாஷிங்ரன், பெப். 28

தடைசெய்யப்பட்டுள்ள போதைப் பொருளான கஞ்சாவை சட்டபூர்வமாக்குவது தொடர்பான ஆய்வுகள் அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

'மர்ஜுவானா' என்றழைக்கப்படும் கஞ்சா பற்றிய ஆய்வுகளுக்காக கலிபோர்னிய மாகாண அரசு 30 லட்சம் டொலர்களை ஒதுக்கியுள்ளது.

மருத்துவப் பயன்பாடுகளுக்கு உபயோகிக்கப்படும் கஞ்சாவை சட்டபூர்வமாக்குவதற்கு ஆதரவாக 4 ஆண்டுகளுக்கு முன்னர் கலிபோர்னிய மக்கள் வாக்களித்திருந்தனர்.

அதன் பிரகாரம் கஞ்சாவை மருத்துவப் பொருளாக அங்கீகரிப்பது பற்றி ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

எய்ட்ஸினால் ஏற்படும் வலியைக் குறைப்பதிலும், ஈரலில் பாதிப்பை ஏற்படுத்தும் 'குரோஸிபா' நோயைக் கட்டுப்படுத்துவதிலும் கஞ்சா ஏற்படுத்தும் தாக்கம் குறித்து முதற்கட்டமாக ஆய்வு செய்யப்படுகிறது. (ஒ-7)

# இந்திய அரசின் பங்கு விற்பனையில் 100 கோடி ரூபா இரகசிய பேரம்

## சட்டீஸ்கர் மாநில முதல்வர் குற்றச்சாட்டு

புதுடில்லி, பெப். 28

இந்திய அரசுக்குச் சொந்தமாகவுள்ள பாரத் அலுமினியம் நிறுவனத்தின் பங்குகளைத் தனியாருக்கு விற்பதில் 100 கோடி ரூபா இரகசிய பேரம் நடந்துள்ளதாக சட்டீஸ்கர் முதலமைச்சர் அஜித் ஜோகி குற்றஞ் சாட்டியுள்ளார்.

முதல்வரின் குற்றச்சாட்டை மறுத்துள்ள மத்திய பங்கு விற்பனைத் துறை இணை அமைச்சர் அருண் ஷோரி, பகிரங்கமான போட்டி அடிப்படையிலேயே பாரத் அலுமினிய நிறுவனத்தின் பங்குகளை வாங்கும் தனியார் நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டதாகக் கூறினார்.

பங்கு விற்பனைப் பேரத்தை மத்திய அரசு மறுஆய்வு செய்ய வேண்டும் என்றும் —

அதற்கு மத்திய அரசு உடன்படாவிட்டால், சட்டீஸ்கர் மாநிலத்தில் இயங்கும் பாரத் அலுமினியம் நிறுவனத்துக்கு செய்து கொடுக்கப்படும் அனைத்து உதவிகளும் நிறுத்தப்படும் என்றும் —

முதல்வர் அஜித் ஜோகி எச்சரித்துள்ளார்.

சட்டீஸ்கர் மாநிலத்தில் உள்ள பாரத் அலுமினியம் நிறுவனம் நஷ்டத்தில் இயங்குவதால் அதில் தனக்குச் சொந்தமான 51 சதவீத பங்குகளை 'ஸ்டெர்லைட்' என்ற தனியார் நிறுவனத்துக்கு விற்க இந்திய அரசு முன்வந்துள்ளது. (ஒ-7-ரி)

## மத்திய அரசின் பங்கு விற்பனை தள்ளிவைப்பு

புதுடில்லி, பெப். 28

பாரத் அலுமினியம் நிறுவனத்தின் பங்குகளை விற்பது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

550 கோடி ரூபா பெறுமதியான மேற்படி பங்குகள் விற்பனை குறித்து நாடாளுமன்றத்தில் ஆராய்வதற்கு வசதியாகவே அந்த நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அரசு கூறியுள்ளது. (ஒ)

## உலக அரங்கில்

## காஷ்மீர் தீவிரவாதிகள் மீது அமெரிக்கா குற்றச்சாட்டு

வாஷிங்ரன், பெப். 28

காஷ்மீரில் தீவிரவாதிகள் அப்பாவிப் பொதுமக்களை கொடூரமாகக் கொலை செய்து வருவதாக அமெரிக்க வெளியுறவுத்துறை குற்றஞ் சாட்டியுள்ளது.

மனித உரிமைகள் குறித்து வாஷிங்ரனில் வெளியிட்ட அறிக்கையில் அமெரிக்கவெளியுறவுத்துறை இதனைத் தெரிவித்துள்ளது.

இந்தியக் கட்டுப்பாட்டில் உள்ள ஜம்மு காஷ்மீரிலும், அஸாம், மணிப்பூர் உட்பட வடகிழக்கு மாநிலங்களிலும் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்களுக்குப் பொதுமக்கள் ஆளாகியுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மிரட்டிப் பணம் பறிப்பது சித்திரவதை செய்வது பாலியல் வல்லுறவு ஆகிய கொடூரமான மனித உரிமை மீறல்களில் தீவிரவாதிகள் ஈடுபட்டு வருவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஒ)

## 'நைஸ்' பிரகடனம் கைச்சாத்து

ஐரோப்பிய ஒன்றியத்தில் மேலதிக அங்கத்துவ நாடுகளைச் சேர்க்க வழிசெய்யும் முக்கியத்துவம் வாய்ந்த 'நைஸ்' பிரகடனம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

அடுத்துவரும் ஆண்டுகளில் 12 புதிய உறுப்பு நாடுகள் சேர்க்கப்பட்ட பின்னர் ஒன்றியத்தின் செயற்பாடுகள் குறித்து பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## கால்நடைகளைத் தாக்கும் நோய் ஸ்கொட்லாந்துக்கும் பரவியது

லண்டன், பெப். 28

பிரிட்டனில்கால்நடைகளை பீடித்திருந்த வைரஸ்தொற்று நோய் தற்போது ஸ்கொட்லாந்துக்கும் பரவியுள்ளது

கால்நடைகளின் வாய் மற்றும் பாதங்களைத் தாக்கும் வைரஸ் கிருமி கடந்த வாரம் பிரிட்டனில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வைரஸ் ஆடு மற்றும் பன்றி ஆகியவற்றையே அதிகம் தாக்கி வந்தது.

காற்று வாகனங்களின் ரயர்கள் மற்றும் மனிதர்களின் உடைகள் ஆகியவற்றின்மூலம் இந்த நோய் பரவுவதாகக் கூறப்படுகிறது.

பிரிட்டனில் காணப்பட்ட இந்த வைரஸ் தொற்று நோய் தற்போது ஸ்கொட்லாந்து கால் நடைகளையும் பீடித்துள்ளது.

இதனையடுத்து. இரு நாடுகளுக்குமிடையிலான 242 மைல் நீளமான எல்லை நெடுகிலும் இராணுவத்தினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுப் பிரிட்டனில்இருந்து கால்நடைகள் ஸ்கொட்லாந்துக்குள் கொண்டு செல்லப்படுவது தடுக்கப்பட்டுள்ளது.

கால்நடைகள் அதிகளவில் வளர்க்கப்படும் இடங்கள் மனித நடமாட்டம் தடை செய்யப்பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன [ஒ]

## ராமதாஸ் மீதான வழக்கு தள்ளுபடி

சென்னை, பெப். 28

பா. ம. க. தலைவர் ராமதாஸ் கடந்த தேர்தலில் தொகுதியை விட்டுத்தர 2 கோடி 50 லட்சம் ரூபா கொடுத்ததாக த. மா. கா. தலைவர் வாழப்பாடிராமமூர்த்தி கூறியதன் அடிப்படையில் தொடரப்பட்ட வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

ராமதாஸ் மீது கூறப்பட்ட முறைப்பாட்டுக்குபோதுமான ஆதாரங்களை மனுவில் குறிப்பிடாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

## ஏவுகணைப் பாதுகாப்புத்திட்டம்

ஏவுகணை எதிர்ப்புத் தற்காப்பு இணையத்தை ஏற்படுத்த ரஷ்யாவும், சீனாவும் முடிவுசெய்துள்ளன.

அமெரிக்க ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்துக்கு உலக நாடுகள் பலவும் கடும் கண்டனம் தெரிவித்துவரும் இந்தச் சமயத்தில், ரஷ்யாவும், சீனாவும் கூட்டாக ஏவுகணைப் பாதுகாப்புத் திட்டத்தை செயல்படுத்த இருப்பது குறிப்பிடத்தக்கது.

## புனிதப் போரில் ஈடுபட்டுள்ள

# தீவிரவாத அமைப்புகளுக்கு பாகிஸ்தானில் புதிய விதிகள்

இஸ்லாமாபாத், பெப். 28

இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புக்களின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக 20 அம்ச நடத்தை விதிமுறைகளை பாகிஸ்தானின் இராணுவ அரசு அறிவித்துள்ளது.

பல்வேறு நாடுகளில் 'ஜிகாத்' எனப்படும் புனிதப் போரில் ஈடுபடுவதாகக் கூறிக் கொள்ளும் தீவிரவாத அமைப்புகள் பாகிஸ்தானில் அலுவலகங்களைஅமைத்து செயற்பட்டு வருகின்றன.

புதிய விதிகளின்படி 'ஜிகாத்' அமைப்புகள்வெளி இடங்களில் ஆயுதங்களை வைத்திருக்கவும் வீதிகளில் குறிப்பாக மசூதிகளுக்கு அருகில் நிதி திரட்டமுகாம் அமைக்கவும், அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

அந்த அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் இராணுவச் சீருடை அணியவும், பொது இடங்களில் வாசகங்களை எழுதவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகளின் செயற்பாடுகளைப் பெருமளவு கட்டுப்படுத்தும் புதிய விதிகள் பாகிஸ்தானில் நடைமுறைப் படுத்தப்படுவது குறித்து அரசியல் அவதானிகள் சந்தேகம் எழுப்பியுள்ளனர். (ஒ 7)

# தேசிய கூட்டணி அரசில் சேர இஸ்ரேலிய தொழிற்கட்சி முடிவு

டெல் அவிவ், பெப். 28

இஸ்ரேலிய புதிய பிரதமர் ஏரியல் ஷெரோன் அமைக்க உத்தேசித்துள்ள தேசிய ஒற்றுமை அரசாங்கத்தில் இணையத் தொழிற் கட்சி தீர்மானித்துள்ளது.

அக் கட்சியின் ஆயிரத்து 600 உறுப்பினர்கள் அடங்கிய மத்திய குழு நேற்று முன்தினம் கூடி இந்த முடிவை எடுத்தது.

கூட்டணி அரசில் சேரும் முடிவுக்கு 67 சதவீதமானவர்கள் ஆதரவளித்ததாகக் கூறப்படுகிறது.

பலஸ்தீன எழுச்சியைக் கட்டுப்படுத்தவும், மேற்காசிய சமாதான முயற்சிகளைப் புதுப்பிக்கவும் வசதியாக ஐக்கிய அரசை அமைக்கப் பிரதமர் தேர்தலில் வென்றவுடனேயே ஏரியல் ஷெரோன் அழைப்பு விடுத்திருந்தார்.

தொழிற்கட்சித் தலைவராக இருந்த முன்னாள் பிரதமர் எகுட்பராக் முதலில் அதற்கு உடன்பட்டபோதும், பின்னர் ஐக்கிய அரசு அமைக்க ஒத்துழைக்க மறுத்தார்.

தற்போது பராக் அரசியலில் இருந்து விலகுவதாகக் கூறியதையடுத்தே தொழிற்'கட்சியினர் கூட்டணி அரசில் சேரும் முடிவை எடுத்துள்ளனர். (ஒ-7)

# பெனாஸிருக்கு எதிரான சதியை அம்பலப்படுத்தும் ஒலிநாடா

## பாகிஸ்தான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முடிவு

இஸ்லாமாபாத், பெப். 28

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவுக்குத் தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னணியில் உள்ள சதி தொடர்பான ஒலி நாடாக்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க பெனாஸிரின் சட்டத்தரணிகள் தீர்மானித்துள்ளனர்.

லஞ்சக் குற்றச் சாட்டுத் தொடர்பாகத் தமக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதை எதிர்த்து பெனாஸிர் பூட்டோ பாகிஸ்தானிய உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

மனுவை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் விசாரணைகளை நடத்தி வருகிறது.

அரசியல் காரணங்களுக்காகவே தமக்கு எதிராகத் தீர்ப்பளிக்கப்பட்டதாக பெனாஸிர் தனது மனுவில் தெரிவித்துள்ளார், இதனை நிரூபிப்பதற்காக, தீர்ப்பளித்த நீதிபதிக்கும், அப்போதைய அமைச்சர்கள் சிலருக்கும் இடையே இடம்பெற்ற உரையாடல்கள் பதிவு செய்யப்பட்ட ஒலிநாடாக்களைப் பயன்படுத்த பெனாஸிரின் சட்டத்தரணிகள் முடிவு செய்துள்ளனர்.

பெனாஸிரின் ஆட்சிக் காலத்தில், அவரும், கணவர் ஆசிப் அலி சர்தாரியும் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து சொத்துகள் சேர்த்ததாக சுமார் 3 ஆண்டுகளின் முன்னர் நவாஸ் ஷெரீப் அரசு குற்றஞ்சாட்டி தொடர்ந்த வழக்கில் அவர்கள் இருவருக்கும் தண்டனை விதிக்கப்பட்டது.

பெனாஸிர் இப்போது வெளிநாட்டில் வாழ்கிறார்; அவரது கணவர் பாகிஸ்தானில் சிறையில் உள்ளார். (ஒ-7)

### கடந்த இரு வருடங்களாக

# களுத்துறை சிறையில் வாடிய வடமராட்சி இளைஞர் விடுதலை

யாழ்ப்பாணம், பெப். 28

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த இரு வருடங்களாக களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவர் நேற்று யாழ் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்.

பருத்தித்துறையைச்சேர்ந்த சிவராஜா சுதர்சன் என்பவரே சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய யாழ் நீதிவான் இ. த. விக்னராஜா முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

குடாநாட்டில் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 9 பேரின் வழக்குகள் யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டிருந்தன. அந்த வழக்குகளுடன் சம்பந்தப்பட்ட 9 பேரில் ஒருவரே விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

ஏனைய 8 பேரும் யாழ். சிறைச்சாலையில் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6-5-ரி)

## குப்பி விளக்கு தட்டுண்டு தீக்காயம்

படுக்கையில் இருந்தபோது குப்பி விளக்குத் தட்டுண்டு தீப்பற்றி எரிந்ததில் இளம் பெண் ஒருவர் உடல் முழுவதும் எரிகாயங்களுக்குள்ளானார்.

கச்சேரி கிழக்கு பகுதியில் நேற்று அதிகாலை 5 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் பேரம்பலம் சபிதா (வயது 27) என்பவரே காயமடைந்தார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15-6-ரி)

# மடுமாதாவின் திருச்சொரூபம் புலிகளின் பிரதேசத்துக்கும்

யாழ்ப்பாணம், பெப். 28

சமாதானத்தை வலியுறுத்தி மடு மாதாவின் திருச்சொரூபத்தை இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மறைக் கோட்டங்களுக்கும் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

தென் இலங்கைப் பிரதேசங்களுக்கு தற்போது எடுத்துச் செல்லப்பட்டுள்ள மாதாவின் [illegible] திருச்சொரூபம் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி மீண்டும் மடு மாதா திருப்பதிக்கு வந்து சேரும்.

ஏப்ரல் 4 ஆம் திகதி மடுவில் இருந்து வன்னிப் பிரதேசத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ள திருச்சொரூபம் 7 ஆம் திகதி சனிக்கிழமை இரவு மீண்டும் மடுமாதா தேவாலயத்திற்கு எடுத்து வரப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-6-ரி)

# வல்வை ஆஸ்பத்திரி ஊழியர் 30 பேருக்கு சைக்கிள்கள்!

## கடன் அடிப்படையில் வழங்கப்பட்டன

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை ஊழியர் நலன்புரிச் சங்கத்தினர் சங்க அங்கத்தவர்கள் முப்பது பேருக்கு கடன் அடிப்படையில் சைக்கிள்களை வழங்கியுள்ளனர்.

15 ஆண்களுக்கான சைக்கிள்களும் 15 பெண்களுக்கான சைக்கிள்களுமே வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் க...னுக்கான க[illegible]டுப் பணத்தைப் பத்து மாதத் தவணையில் செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட வைத்திய அதிகாரியும், நலன்புரிச் சங்கத் தலைவருமான டாக்டர் எஸ். மயிலேறும் பெருமாளின் முயற்சியினால் சங்க அங்கத்தவர்களுக்கு இந்தச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (க-117)

## குரும்பசிட்டி மாணவர்கள் கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவு

1999, 2000 ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள், ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், க.பொ.த. சாதாரண பரீட்சையில் 7 D பெற்றவர்கள் ஆகியோருக்கு குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் 09-03-2001 இல் நடத்தும் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் வைத்து ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. மேற்படி மாணவர்கள் அதிபர்களது சான்றிதழ்களுடன் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்துக்குச் சமுகம் தரவும்.

கு. கலியுகவரதன் (ஜே.பி)
செயலாளர்

உரும்பிராய். (84713)

## பிறந்த நாள் வாழ்த்து

♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦♦

### திரு. கனகரெத்தினம் பாலசிங்கம்

(கிராம சேவையாளர் J/66)

அவர்கள் 27-02-2001 நேற்றைய தினம் தனது பிறந்த நாளில் பொன் விழாவினைக் கொண்டாடி மகிழ்ந்ததையிட்டு விழா நாயகனை நாம் மனதார வாழ்த்துகின்றோம்.

திரு. கா. திருநீலகண்டன் குடும்பத்தினர்,
பாண்டியன் தாழ்வு.

(84714)

## குடும்ப நல சேவையாளருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 28

நாளை முதல் ஆறு மாத கால வெளிக்களப் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவ குடும்ப நல சேவையாளர்களை நாளை காலை 8.30 மணிக்கு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் சமுகம் அளிக்கும்படி சுகாதார சேவைகள் மாகாண பிரதிப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ-3)

### பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்

# பதின்மூன்று இளைஞர்களுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

யாழ்ப்பாணம், பெப் 28

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 13 இளைஞர்கள் நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களை மீண்டும் அடுத்த மாதம் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

சின்னத்தம்பி தயாபரன் (உரும்பிராய் வடக்கு), நாகலிங்கம் யேசுதாஸ் (மிருசுவில் வடக்கு), சின்னத்துரை விஜயரூபன் (உரும்பிராய் கிழக்கு), இராஜமனோகரன் தயாகரன் (ரயில் நிலைய வீதி, கோண்டாவில்), கார்த்திகேசு சுசிந்தன் (மணியகாரன் வீதி, கொக்குவில்), நடராசா சொர்ணலிங்கம் (அக்கராயன் குளம் கிளிநொச்சி), கார்த்திகேசு குலேந்திரன் (பொற்பதி வீதி, கோண்டாவில்), வல்லிபுரம் கருணாகரன் (மிருசுவில் வடக்கு), துரைசிங்கம் பிறேம்குமார் (செம்மணி வீதி, நல்லூர்)

மார்க்கண்டு சுதன் (உரும்பிராய்), செல்வராசா மணிவண்ணன் (கந்தர்மடம்), கணபதிப்பிள்ளை பாலசுந்தரம் (நாவலர் வீதி, யாழ்ப்பாணம்), குமாரவேல் லட்சுமி (நாவலர் வீதி, யாழ்ப்பாணம்)

இவர்களில் சந்தேகநபரான கார்த்திகேசு குலேந்திரன் என்பவரிடம் இருந்து 20 ஆயிரத்து 850 ரூபா பணமும் ஒரு ரீவி, ஒரு டொக், ஜெனறேட்டர் ஒன்று, சார்ஜ்ஜர் லைட் ஆகியவற்றைத் தாம் கைப்பற்றியதாகத் தெரிவித்து அவற்றைப் பொலிஸார் நீதி மன்றில் ஒப்படைத்தனர்.

மேற்படி பொருள்களை நீதிமன்ற பாதுகாப்பில் வைத்திருக்குமாறு பதிவாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

## யாழ். பொலீஸில் 12 சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், பெப் 28

பொலீஸாரால் மீட்கப்பட்ட 12 சைக்கிள்கள் பொதுமக்களால் அடையாளம் காணும் பொருட்டு யாழ். பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சைக்கிள்களில் ஒன்று பெண்களுக்கு உரியதாகும்.

இந்தச் சைக்கிள்களுக்கு உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ். பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யு. உமகிரிய தெரிவித்தார்.

பொதுமக்களால் தவறவிடப்பட்ட மற்றும் பறிகொடுத்த சைக்கிள்களே மீட்கப்பட்டு உரியவர்களிடம் வழங்கப்படுகின்றன (க-6-ரி)

## மாணவிகள் விபத்தில்

யாழ்ப்பாணம், பெப். 28

இராணுவ டிரக்குடன் மோதுண்டு மாணவி ஒருவர் படுகாயமடைந்தார்.

ஆரியகுளம் சந்தியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் கல்விப் பொதுத் தராதரம் உயர்பிரிவு 2001 ஆம் ஆண்டு மாணவியான — கொழும்புத்துறையில் இருந்து இடம்பெயர்ந்து ஆனைக்கோட்டையில் வசித்து வரும் — மகாலிங்கம் நிஷாந்தினி (வயது 18) என்பவரே சைக்கிளில் பாடசாலைக்குச் சென்றவேளை விபத்துக்குள்ளானார்.

படுகாயமடைந்து சுய நினைவிழந்த நிலையில் இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்குச் சென்ற மாணவி ஒருவரும் கோப்பாய்ப் பகுதியில் சைக்கிளில் இருந்து விழுந்து காயமடைந்தார்.

இச்சம்பவத்தில் நீர்வேலி வடக்கைச் சேர்ந்த கணேசலிங்கம் மாலினி (வயது 13) என்ற எட்டாம் ஆண்டு மாணவியே காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-15)

# பொது நிகழ்வுகளை நடத்த கூட்டுறவுச் சங்க மண்டபம்

அரியாலை பெப் 28

யாழ் நகரில் கே. கே. எஸ். வீதியில் அமைந்திருக்கும் யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூட மண்டபம் வாடகைக்கு விடப்பட்டு வருகின்றது.

நவீன வசதிகளைக் கொண்ட இந்த மண்டபத்தில் பொது நிகழ்வுகளை நடத்துவதற்குக் குறைந்த கட்டணம் அறவிடப்பட்டு வருவதாகச் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இருநூறு இருக்கை வசதிகளைக் கொண்ட இந்த நவீன கேட்போர்கூட மண்டபம் சங்கத்தின் தலைமைச் செயலகத்தின் மூன்றாம் மாடித் தொகுதியில் அமைந்துள்ளது (ச-17)

## சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை

சாவகச்சேரி இலங்கை வங்கிக்கிளை தொடர்ந்து செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையில் இயங்கும் எனவும் —

வடமராட்சிப் பகுதியில் உள்ள தென்மராட்சிப் பகுதி மக்கள் வழமை போல் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

## முற்றவெளியில் விடப்படும் விஷப் பாம்புகள்!

பொதுமக்கள் தங்கள் வீட்டு வளவுகளில் காணப்படும் நாகம் மற்றும் விஷப் பாம்புகளைப் பிடித்து வந்து யாழ். முற்றவெளிப் பகுதியில் உள்ள பற்றைகளில் விட்டுச் சென்றுவிடுகின்றனர்.

யாழ். நகர் மற்றும் கோட்டைப் பகுதிகளில் நாகபாம்புகள் தற்போது அதிகளவில் காணப்படுகின்றன. அப்பகுதிகளைச் சேர்ந்தவர்களே பாம்புக் குட்டிகளை 'ஜாம்' போத்தல் மற்றும் உரப்பைகளில் பிடித்து வந்து இங்கு விடுவதை அவதானிக்க முடிகிறது.

# விளையாட்டு நிகழ்வுகள்

கோப்பாய் பிரதேச செயலகத்து குட்பட்ட — பதிவு செய்யப்பட்ட — கழகங்களுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாக விருக்கின்றது

இன்றைய ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:

★ பிற்பகல் 3.30 மணி — உரும்பிராய் சென். மைக்கல் வி. க. எதிர் கோப்பாய் ஐ வி. க.

★ பிற்பகல் 4.30 மணிக்கு — புத்தூர் கலைமதி வி. க. எதிர் அச்சுவேலி சில்வஸ்ரார் வி. க. (உ-3)

★ ★ ★

வலிகாமம் கல்வி வலயத்தின் தெல்லிப்பழைக் கோட்டப்பாடசாலை அணிகளிடையேயான சம — 20பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட — மென்பந்து துடுப்பாட்டப் போட்டியின் முதலாம், 2 ஆம், 3 ஆம் இடங்களைப் பெறும் அணிகளைத் தெரிவு செய்வதற்கான ஆட்டங்கள் இன்று புதன்கிழமை மருதனார்மடத்தில் அமைந்துள்ள யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (உ-86)

★ ★ ★

வலிகாமம் கல்வி வலயத்தின் தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலை அணிகளிடையேயான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடத்தில் அமைந்துள்ள யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. [உ-86]

# கைதடியில் பாடசாலைகளை இயக்குவது குறித்து ஆராய்வு

## கல்வி அதிகாரிகள் குழு அங்கு சென்றது

கைதடிப் பகுதியில் உள்ள ஆறு பாடசாலைகளை மீள இயக்குவது தொடர்பாக நேற்று அங்கு சென்ற கல்வி அதிகாரிகள் குழு ஆராய்ந்தது.

யாழ். மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை, தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா, பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ். கணேசன், உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். சத்தியநாதன் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகள் இந்தக் குழுவில் சென்றிருந்தனர்.

கைதடியில் உள்ள கலைவாணி வித்தியாலயம், முத்துக்குமாரசாமி வித்தியாலயம், சேதுகாவலர் வித்தியாலயம், எருதிடர் அ. த. க. பாடசாலை, குருசாயி வித்தியாலயம், விக்னேஸ்வரா வித்தியாலயம் ஆகியவற்றுக்குச் சென்ற குழு சேத விவரங்களை மதிப்பிட்டது.

சேதுகாவலர் வித்தியாசாலை பலத்த சேதம் அடைந்திருந்தது என்றும் —

பாடசாலைகளில் மேசைகள் மட்டுமே இருந்தன என்றும் —

கதிரைகளைக் காணவில்லை என்றும் — குழுவினர் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியில் மக்கள் முழுமையாக மீளக்குடியமர்ந்த பின்னரே சகல பாடசாலைகளையும் இயக்க முடியும் என்றும் —

ஆரம்பத்தில் கைதடியில் மத்திய பகுதியில் ஒரு பாடசாலையை இயக்க நடவடிக்கை எடுக்கலாம் என்றும் — குழுவினர் தெரிவித்தனர். (உ-3)

உ
'ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ'

# யாழ். வண்ணை நகர் கன்னாதிட்டி

# அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்

## விக்கிரம வருட (2001 ஆம் ஆண்டு)

## மஹோற்சவ விஞ்ஞாபனம்



மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
அடல் ஆனேறு ஊரும் அடிகள் அடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்

மாசி மகத்திற்கு ஒரு மகிமையுண்டு. பராசக்தி ஒரு தாமரை மலரின் வலம்புரிச் சங்கு வடிவுடன் யமுனா நதியில் தவஞ்செய்து கொண்டிருந்தார். தட்சன் வேதவல்லியுடன் யமுனையில் வந்து நீராடினான். அங்கிருந்த வலம்புரியைக் கண்டு வியந்து எடுத்தான். உடனே அது ஒரு பெண்ணுருவாயிற்று. சிவனார் தந்த வரத்தின் படி பராசக்தியே பாவையாக வந்தாள் எனவுணர்ந்தான். வேதவல்லியிடம் தந்தான். அவள் தன் மாளிகைக்குக் கொண்டு போய்த் தாலாட்டி தாட்சாயணி என்று பெயர் சூட்டினாள். அம்பிகையை இனிது வளர்த்தாள்.

சிவபெருமான் தட்சனுக்குத் தந்த வரத்தை நிறைவேற்ற பராசக்தி வலம்புரி சங்கு வடிவுடன் தாமரை மலரில் தவஞ்செய்து பெண்ணுருப் பெற்று தாட்சாயிணி எனும் நாமம் பெற்றது மாசி மகம் ஆகிய மகத்தான நாளில் ஆகும்.

கந்தபுராண காளிந்திப் படலத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார் இவ் வரலாற்றை கூறியருளினார்.

இவ்வாறு நினைக்க இனிமையும், போற்ற இன்பம் விளைவிக்கும் பெருமை வாய்ந்த மாசி மாதத்தில் அன்னை காளிஹா பரமேஸ்வரிக்கு மஹோற்சவத் திருவிழா ஆரம்பமாகி மாசி மகத்தன்று ரத உற்சவமும், பூரணை அன்று தீர்த்தோற்சவமும் நடைபெற திருவருள் பாலித்திருப்பதால் அம்பிகை அடியார்கள் யாபேரும் பக்தி சிரத்தையுடன் அம்பாளைத் தியானித்து சகல சௌபாக்கியங்களும் பெற்று உய்யவும் நாட்டில் சமாதானமும் சுபீட்சமும் உண்டாக காளியம்பாள் கருணை புரியப் பிரார்த்திப்போமாக!

**புதிய சித்திரத் தேர்**

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் இந்த ஆண்டு புதிய தேரில் அம்பாள் வீதி பவனி வந்து அடியார்களுக்கு அருள் பாலிக்கவுள்ளார்.

- ✷ *28–02–2001 புதன் கொடியேற்றம்.*
- ✷ *07–03–2001 புதன் சப்பறத் திருவிழா.*
- ✷ *08–03–2001 வியாழன் தேர்த்திருவிழா.*
- ✷ *09–03–2001 வெள்ளி தீர்த்தோற்சவம்.*
- ✷ *10–03–2001 சனி பூங்காவனம்.*

**நியூ தெய்வா நகைமாடம்**
72, கன்னாதிட்டி வீதி, யாழ்.
அழகிய நகைகளின் தெரிவுக்கு அனைவரும் நாட வேண்டிய நகைமாடம்.

**துர்க்கா நகைப்பூங்கா**
71, கன்னாதிட்டி வீதி, யாழ்.
அழகிய நகைகளின் பூங்கா.

**நித்தியானந்தா நகைத் தொழிலகம்**
49, கன்னாதிட்டி வீதி, யாழ்.
ஓடர் நகைகளை உத்தரவாதத்துடன் செய்து தருபவர்கள்.

சகலவிதமான T.V. கள் டெக், CD பிளையர் கசற் றேடியோ இதர மின் உபகரணங்கள் குறித்த தவணையில், தரமான முறையில் பழுது பார்த்துக் கொடுப்பவர்கள். எம்மிடம் உதிரிப்பாகங்களும் பெற்றுக் கொள்ளலாம்.
**வாசன் T.V. சென்ரர்,** 40, கன்னாதிட்டி வீதி, யாழ்.

**நியூ கல்யாணி நகை அகம்**
87, கன்னாதிட்டி வீதி, யாழ்.
*அழகிய அணிகலச் சோலையென அனைவரும் நாடுவது.*

(பழைய, புதிய சினிமாப்பாடல் மற்றும் பக்திப் பாடல்களை நேரடி C.D மூலம் சிறந்த முறையில் ஒலிப்பதிவு செய்திட நாடவேண்டிய இடம்.
**தீஸ் ஓடியோ,** 40, கன்னாதிட்டி வீதி, யாழ்.

**நியூ ஸ்ரார்ஸ் ஜூவலர்ஸ்**
87/1, கன்னாதிட்டி வீதி, யாழ்.
ஓடர் நகைகளை உத்தரவாதத்துடன் செய்து வழங்குபவர்கள்.

**நியூ சயன்ஸ் ஹேறால்**
134, கன்னாதிட்டி வீதி, யாழ்.நகர்.

***சாருணி ஜூவல் கட்டிங் வேக்ஸ்***
70, கன்னாதிட்டி றோட், யாழ்.
*மெஷின் கட்டிங் நகைகளை நவீன மோஸ்தர்களில் தருபவர்கள்.*

**சாந்தி ஷூபே**
278/2, கஸ்தூரியார் வீதி, யாழ்.

***ஹரன் ஜூவலர்ஸ்,***
**50, கன்னாதிட்டி வீதி, யாழ்.**
நவீன டிசைன் நகைகளை நவ நாகரீகத்துக்கு ஏற்றவாறு வடிவமைத்துத் தருபவர்கள்.

***நியூ சந்திரா கச்சான் அல்வா தொழிலகம்***
209/1, நாவலர் வீதி, யாழ்.

**ஒடியன் மியூசிக் சென்ரர்,**
260, கஸ்தூரியார் வீதி, யாழ். (கன்னாதிட்டிச் சந்தி)

குளிர் சாதனப் பெட்டி GAS நிரப்புதல் பெயின்றிங், ஐஸ்பிலான், ஐஸ்கிறீம் மெசின் போன்றவற்றை செய்து கொள்ள நாட வேண்டிய இடம்:
***சேகர் குளிர் ஊற்று,*** **No.354, KKS, வீதி யாழ்.**

**ஸ்ரீ அபிராமி ஜுவலர்ஸ்**
240, கஸ்தூரியார் வீதி, யாழ்.
கன்னியர் விரும்பும் கண்ணைக்கவரும் நகைகளுக்கு.

**ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்**
31D, நவீன சந்தை, சுன்னாகம்.

**கஜலஷ்மி நகைப்பூங்கா** (கமிலேஸ்)
280, கஸ்தூரியார் வீதி, யாழ்.
ஓடர் நகைகள் குறித்த நேரத்தில் செய்து தருபவர்கள்.

**விநாயகர் மிக்சர்**
30, பொன்னப்பா லேன், யாழ்.

***பிரியங்கா நகைமாடம்***
76A, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தரமான நகைகளைத் திறமாகச் செய்து தருபவர்கள்.

***கோபால் நகைமாளிகை,*** துரையப்பா பத்தர் கோபாலசாமி,
82/5, கஸ்தூரியார் வீதி, யாழ்.
ஓடர் நகைகளை உறுதியுடன் தயாரித்துத் தருபவர்கள்.

# குடாநாட்டில் சிற்பக்கலை நலிவடைந்து செல்கின்றது

## தொடரும் யுத்தத்தின் தாக்கமே இது என்கிறார் ஜீவரட்ணம் ஆச்சாரி

தொடரும் யுத்த அவலங்கள் குடாநாட்டு மக்களின் கலையார்வத்தை குன்றச்செய்து செய்துவிட்டதென்றே கூற வேண்டும். கலையார்வம் மிக்க இளைஞர்கள் பலரும் பொருளாதார



130 தேர்களை வடிவமைத்த திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய ஸ்தபதியார் சிற்பச்சக்கரவர்த்தி, சிற்பராஜசிம்மன், சிற்பரதவித்தகர், சிற்பகேசரி கலாபூசணம் ஆ.ஜீவரட்ணம் ஆச்சாரியார்.

நன்மை கருதியும், உயிர்ப்பாதுகாப்புக் கருதியும் அந்நிய தேசங்களுக்குச் சென்றமை குடாநாட்டில் சிற்பக்கலை மரபு படிப்படியாக நலிவடைந்து செல்வதற்கு காரணமாகும்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள இந்து ஆலயங்களுக்குத் தேர், மஞ்சம் மற்றும் வாகனங்கள் அமைத்து அதன் மூலம் ஈழத்தின் சிற்பக்கலை மரபில் தனக்கெனத் தனியிடம் பதித்த திருநெல்வேலி ஆறுமுகம் சிற்பாலய ஸ்தபதியார் கலாபூஷணம் ஆ.ஜீவரட்ணம் ஆச்சாரியார் இவ்வாறு கூறுகிறார்.

சுகவீனமுற்ற நிலையில் தற்போது சிகிச்சை பெற்று வரும் இவர் 'கலைச்சுடர்' பகுதிக்கு வழங்கிய செவ்வியில் ஈழத்தின் குறிப்பாக குடாநாட்டின் சிற்பக்கலை மரபு குறித்து விரிவாக உரையாடினார்.

அவரது செவ்வி இங்கு வெளியாகிறது:-

*கேள்வி:* தங்களின் சிற்பக்கலை மரபு பற்றி....!

*பதில்:-* எமது குடும்பமே ஒரு கலைக்குடும்பம். எனது தகப்பனாரான ஸ்தபதி விநாயகர் ஆறுமுகம் நல்லூர் வீரமாகாளி, புத்தூர் சிவன் ஆகிய ஆலயங்களில் சிற்பத்தேர் அமைத்ததோடு நல்லூர் கந்தனின் கைலாய வாகனத்தை உருவாக்கியவர். அண்ணரான ஸ்தபதி ஆ.தம்பித்துரை சிற்பம், ஓவியத்துறைகளில் சிறந்து விளங்கியவர். அத்துடன் குடாநாட்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்கள் பலவற்றுக்கு சித்திரத் தேர்கள் அமைத்ததோடு வடமாநிலத்துககான 'சித்திரபாட வித்தியாதரிசியாக' விளங்கியவர்.

தந்தையாரான ஸ்தபதி வி.ஆறுமுகம் மற்றும் மாமல்லபுரம் கணபதி ஸ்தபதி, காரைக்குடி சிறிநிவாச ஸ்தபதி, மாயாவரம் ஏகாம்பரம் ஸ்தபதி, கும்பகோணம் ஏகாம்பரம் ஸ்தபதி ஆகியோரிடம் நான் சிற்பக்கலை பற்றிய நுட்பங்களைக் கற்றறிந்து கொண்டேன். எனக்குப் பின்னர் எனது கலைப்பணியை மகன் ஜெயப் பிரகாஷ் தொடர்கிறார். ஆவரங்கால் சிவன், கொக்குவில் ஸ்ரீ சாயி துர்க்காதேவி, புதுக்குடியிருப்பு கந்தசாமி ஆகிய ஆலயங்களுக்கான சித்திரத் தேர்கள் ஜெயப்பிரகாசின் கைவண்ணத்தில் உருவாக்கப்பட்டவை. எனது மாணவர்களில் ஒருவரான ஸ்தபதி நடராஜா சற்குருநாதன் (குரு) திருநெல்வேலியில் திரிஷிகா கலைக்கூடம் என்னும் சிற்ப நிலையம் அமைத்து தனது சிற்பக் கலையைத் தொடர்கிறார்.

**செவ்வி: ஆனந்தன்**

*கேள்வி:-* இதுவரை தாங்கள் அமைத்த சித்திரத்தேர்கள் பற்றிக் கூறுவீர்களா?

*பதில்-* இதுவரை 130 சிற்பத் தேர்கள் எனது கைவண்ணத்தினால் உருவாக்கப்பட்டுள்ளன. வரலாற்றுச் சிறப்புமிக்க திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கான ஐந்து திருத்தேர்கள், திருகோணமலை பத்திரகாளி, கண்டி கட்டுக்கலை செல்வவிநாயகர், திருநெல்வேலி சிவன், திருநெல்வேலி முத்துமாரியம்மன் ஆகிய ஆலயங்களின் தேர்களும் இவற்றில் அடங்கும். ஈழத்தின் சிற்பக்கலைச்சிறப்பை மலேசியாவில் அமைத்த பதின்மூன்று சித்திரத்தேர்கள் மூலம் எடுத்துக் காட்டியுள்ளேன்.

*கேள்வி:-* குடாநாட்டின் சிற்பக்கலையும், சிற்பக்கலைஞர்களும் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை?

*பதில்:-*சிற்பக்கலைப் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் பலரும் வெளிநாடுகளை நாடிச் செல்கின்றமையால் ஆர்வமும், துடிப்பும் உடைய சிற்பக் கலைஞர்களை உருவாக்க முடிவதில்லை. எனினும் இவ்வாறு பல்வேறு இடர்பாடுகளின் மத்தியில் உருவாகும் சிற்பக்கலைஞர்களுக்கு குடாநாட்டுச் சமூகம் உரிய இடம் கொடுப்பதில்லை என்றே கூற வேண்டும். குறிப்பாக இந்த மண்ணின்

## கலைச்சுடர்

தயாரிப்பு:- நர்த்தகன்

வளர்ச்சிக்காகவும், சிற்பக்கலையின் வளர்ச்சிக்காகவும் பங்காற்றிய மூத்த சிற்பக் கலைஞர்கள் பலரும் தற்போது பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர். இத்தகைய கலைஞர்களின் சேவையை மறப்பது நன்றன்று. மூத்த சிற்பக்கலைஞர்கள் பலரும் இனங்காணப்பட்டு அவர்கள் எதிர்நோக்கும் பல வகையான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சிற்பங்களை வடிவமைப்பதற்குரிய நல்லின மரங்களைப் பெறுவதிலும் குடாநாட்டில் தற்போது நெருக்கடி நிலை காணப்படுகிறது. வன்னிப்பகுதியுடனான தரை மூலமான தொடர்புகள் இருந்த காலங்களில் அங்கிருந்து எமக்குத் தேவையான மரங்களை இங்கு கொண்டுவரக் கூடியதாக இருந்தது.

அதேவேளை தொடர்ச்சியாக நிகழும் இடம் பெயர்வுகள் காரணமாக ஆலயங்களுக்குத் தேவையான தேர், சப்பறம் மற்றும் வாகனங்கள், மஞ்சம் போன்றவற்றைப் புதிதாக அமைப்பதற்கு ஆலய பரிபாலன சபையினர் பெரிதும் விரும்புகின்றார்களில்லை. குடா நாட்டில் கடந்த யுத்த நிலைமைகளின் போது பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சிற்பத் தேர்கள் சில அழிக்கப்பட்டதையும் மறக்க முடியாது.



ஆச்சாரி ஜீவரட்ணம் வடிவமைத்த சிற்பத் தேர்களில் ஒன்று.

கேள்வி:- குடாநாட்டின் சிற்பக்கலை மரபை புத்துயிர் பெறச் செய்வதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

பதில்:- சிற்பக்கலைத் தேர்ச்சி என்பது சிற்பங்கள் பற்றிய அறிவின் மூலமும், பயிற்சியின் மூலமும் பெறப்படுவதாகும். தமிழகத்தில் சிற்பக்கலை பற்றிய பயிற்சியினை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் பல சிற்பக் கல்லூரிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தக் கல்லூரிகளில் சிற்பக்கலையைப் பயிலும் மாணவர்களுக்கு சகல வகையான வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டுள்ளன.

### சிற்பக் கல்லூரி இங்கில்லை

ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரையில் இத்தகைய சிற்பக் கல்லூரிகள் இல்லை. அதேவேளை இத்தகைய கல்லூரிகள் உருவாக்கப்பட்டால் கலையார்வம் மிக்க இளைஞர்கள் பலர் வாழும் மூத்த சிற்பக் கலைஞர்களின் ஆதரவுடனும், வழிகாட்டுதலுடனும் சிற்பக்கலையில் நன்கு தேர்ச்சி பெற்றுக்கொள்ள முடியும். இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் இந்து சமய நிறுவனங்கள், இந்து ஆர்வலர்கள் இத்தகைய சிற்பக்கல்லூரிகளை உருவாக்குவதிலும், அவற்றை வழிநடத்துவதிலும் தம்மாலான பங்களிப்பை வழங்க வேண்டும் என குடாநாட்டின் சிற்ப உலகம் எதிர்பார்த்து நிற்கின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இந்த விடயத்தில் முழுமூச்சுடன் செயற்பட வேண்டும். ✱

---

# வடக்கு - கிழக்குக்கு.....

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

### விளம்பர மோகம் ஏன்?

எல்லா நாடுகளிலும்தான் குழந்தைகள் பிறக்கின்றன. பூப்பெய்துகிறார்கள். ஆனால் அவற்றை எல்லாம் எமது நாட்டில்தான் பத்திரிகைகள் மூலம் விளம்பரப்படுத்திப் புகழ் தேடுகிறார்கள். எமது சமூகத்தின் ஓர் அங்கமாக, தொடர்கதையாக இருக்கும் இவர்கள் காணாமல்போனவர்களைப்பற்றி சிந்தித்துப் பார்த்திருக்கிறார்களா?

எவ்வளவு கேவலமான நிலையில இந்த நாட்டு மக்கள் வாழ்கின்றார்கள்!

பிள்ளைகளைக் காணாமல் தவிககும் இந்த மக்களின் வேதனைகளை, துன்பங்களை உணர்பவர்கள் இருக்கிறார்களா? இவர்களுக்கு ஆறுதல் கூறும் ஸ்தாபனங்கள் எவையாவது இருக்கின்றனவா? காணாமல் போனவர்கள் தொடர்பாக இதுவரை ஒரு கையேடு கிடையாது.

இந்த நிலையில் முதற்றடவையாக பல்கலைக்கழக இளைஞர்கள் இவை எல்லாம் குறித்துச் சிந்தித்திருக்கிறார்கள். இதனையிட்டு நான் பெருமைப்படுகிறேன்.

ஒவ்வொரு கிராமத்திலும் பெரிய பெரிய கோயில்களைக் கட்டுகின்றார்கள். ஆனால் அந்த கிராமங்களில் எத்தனை பிள்ளைகள் உடுக்க உடையின்றி இருக்கிறார்கள், உண்ண உணவின்றித் தவிக்கின்றார்கள். இதனை எவராவது சிந்திக்கின்றார்களா? இவர்கள் கோயில்களைக் கட்டி முடிக்க அவர்கள் சூண்டு போட்டு இடிக்கிறார்கள். இதற்காகத்தான் செலவு செய்கிறார்கள்.

இளைஞர்களே! நீங்கள் ஊரூராகச் செல்லுங்கள், நாடகங்களை நடத்துங்கள், அதில் சேரும் பணத்தைக் கொண்டு இந்தப் பிஞ்சுகளுக்கு உதவி செய்யுங்கள் நீங்கள் செய்யும் இந்தப் பணிக்கு சேருகின்ற பணம் போதாமல் இருக்கலாம். ஆனால் உங்களுக்கான அனைத்து உதவிகளையும் நாம் செய்வோம்.

இந்தத் திட்டத்தை, அளப்பரிய பணியை நான்கு சுவருக்குள் வைத்திருக்காமல் வெளியே கொண்டு வாருங்கள் உங்களது இந்தப் பணி சிறக்க மனதார வாழ்த்துகிறேன்.

**வண. பிதா. ஜெயக்குமார்**

கடந்த நான்கு வருடங்களாகக் காணாமற் போனோர் சங்கத்துடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. இவர்களது பிரச்சினைகள் உரிய இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதில்லை. இது ஒரு பெரிய குறைபாடாகும். தமது பிரச்சினைகளை உரிய மட்டங்களுக்கு எப்படி எடுத்துச் செல்வது? எவ்வாறு முன்னெடுப்பது? என்பது தெரியாமல் அதற்கு ஆதரவும் கிடைக்காமல் இவர்கள் தவிக்கின்றார்கள்.

இவர்களது அகிம்சைப் போராட்டங்களில் கூட தமிழ் மக்களாகிய நாம் எவ்வளவு தூரம் பங்கு பற்றுகின்றோம்? நாம் எதற்காக இவர் களது போராட்டங்களுக்குத் தோள் கொடுக்கத் தயக்கம் காட்டுகின்றோம்? இதைப் பற்றி ஒவ்வொரு தமிழனும் சிந்திக்க வேண்டும். இனி மேலாவது எமது பங்களிப்பை முழுமையாக வழங்க முன்வரவேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் எமது வீட்டில் பிரச்சினை வரும் வரை காத்திருக்காது துன்பப்படும் மக்களின் துயரத்தில் பங்கெடுக்க வேண்டும். அவர்களது அவலக் கண்ணீரைத் துடைக்க முன்வர வேண்டும். இந்த முயற்சியில் இன்று பல்கலைக்கழக மாணவர்கள் இறங்கியுள்ளனர். இது வரவேற்கத்தக்க விடயமாகும். இந்த முயற்சி பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். இதே போன்று ஏனைய பீடங்களும் முன் மாதிரிகையாக செயற்பட வேண்டும். இதன் மூலம் இந்தச் சிறுவர்களின் வறுமையைப் போக்க முடியும்.

அரச சார்பற்ற நிறுவனங்களும் காணாமல் போன குடும்பங்களுக்கு பல்வேறு வகைகளிலும் உதவி செய்து வருகின்றன. அந்தவகையில் 'கியூடெக்' நிறுவனமும் காணாமல் போனோர் குடும்பங்களுக்கு பல்வேறு வகைகளிலும் உதவி செய்து வருகிறது.

'யுனிசெவ்' நிறுவனத்தின் உதவியுடன் சர்வோதயம் நூறு விதவைகளுக்கு உதவி வழங்கும் திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் உதவிபெற விரும்புவர்கள் சர்வோதயத்துடன் தொடர்பு கொண்டால் மேலதிக விவரங்களைப் பெற முடியும்.

### விவரங்கள் இல்லை

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பெருமளவில் இருக்கிறார்கள். ஆனால் அவர்களின் உண்மையான விவரம் இன்று வரை எவருக்கும் தெரியாது. இவர்களின் பெயர் விவரங்களைத் தொகுத்து ஓர் ஆவணமாக வெளியிட வேண்டும்.

இந்தச் சிறுவர்களுக்கு உதவி வழங்க முன்வரும் பொது அமைப்புகள் எவ்வாறு சிறுவர்களின் ஏழ்மை நிலையை உணர்ந்து மனித நேயத்துடன் செயலாற்ற வேண்டும் என்பதைத் திட்டமிட்டு செயற்பட வேண்டும்.

**விரிவுரையாளர் சிதம்பரநாதன்**

தமிழர்களின் தலைமைக்கும் மக்களுக்கும் இடையில் உள்ள இடைவெளியைப் பயன்படுத்தி எதிரி எம்மைப் பிரிக்க முனைகிறான். இதற்கு நாம் ஒத்துழைக்க முடியாது. இந்த நிலையை உணர்ந்து நாம் செயலாற்ற வேண்டும்.

ஜனாதிபதி பாரிஸில் நின்று கூறுகின்றார், தமிழர்களுக்கு வட பகுதியில் இருந்து படையினர் வெளியேறுவது விருப்பம் இல்லையாம். இது உண்மையா? எமது விருப்பம் எது என்று அவருக்குத் தெரியுமா? நாம் ஏன் ஒன்று திரண்டு எமது விருப்பத்தை வெளியிட முடியாது? இதில ஏதாவது சட்டச் சிக்கல் இருக்கிறதா?

எமது விருப்பம் என்ன? மின்சாரமும், ரெலிபோனுமா? அது விருப்பம் தான். ஆனால் அதிலும் மேலாக எமது அடி மன ஆழத்தில் இருந்து ஒரு விருப்பம் வெளிவருகிறதே எம் ஒவ்வொருவருக்கும்! நாம் ஏன் அதை வெளிக்காட்ட முடியாது? அது என்ன குற்றமா?

தமிழ் மக்களின் உண்மையான விருப்பம் என்ன என்பது அவர்களால வெளிப்படுத்தப்பட வேண்டுமே தவிர பாரிஸிலோ அமெரிக்காவிலோ நின்று கொண்டு எவராலும் அதைத் தீர்மானிக்க முடியாது.

இதனைத் தீர்மானிக்க அவர்களுக்கு உரிமையும் கிடையாது. ஏனெனில் இது எமது விருப்பம். எங்களின் உணர்வுகள்.

இன்று மனித உரிமைகள் தொடர்பாக அமெரிக்க நிபுணர்கள் இராணுவத்தினருக்குப் பயிற்சியளிக்கிறார்களாம். இதில் இருந்து என்ன வெளிப்படுகிறது? மனித உரிமைகள் என்றால என்ன? என்பது தொடர்பாகக் கூட அவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட வேண்டி உள்ளது என்பதே.

நாம் அனைவரும் ஒன்று திரண்டு எமது விருப்பத்தை வெளிப்படுத்த அணிதிரள வேண்டும். இது தொடர்பாக ஏதாவது சட்டச் சிக்கல் இருக்கிறதா என்று தெரியப்படுத்துங்கள். ✪

---

## அண்ணனை கம்பியால் தாக்கிய தம்பி

யாழ்ப்பாணம்,பெப்.28

அறிவுரை கூற முற்பட்ட அண்ணன், தம்பியாரால் தாக்கப்பட்டு இடது கை முறிந்த நிலையில் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இருபாலை டச்சு வீதியைச் சேர்ந்த ஐயாத்துரை சந்திரமோகன் (39-வயது) என்ற குடும்பஸ்தரே இரும்புக்கம்பித் தாக்குதலுக்கு இலக்கானவர் ஆவார். (க-6-ரி)

## கிளாலி கிராமிய சங்கம் புனரமைப்பு

தென்மராட்சி,பெப்.28

கிளாலி கிராமிய அபிவிருத்திச சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம் அண்மையில் யாழ். - மானிப்பாய் வீதியில் இயங்கும் பளைப் பிரதெச செயலக மண்டபத்தில் பிரதேச செயலக கிராமிய அபிவிருத்தி அலுவலர் ம.அழகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவராக வ.ம. ஜெயராசா, செயலாளராக அன்ரன் ஜேசுதாஸ், பொருளாளராக ம.மரியதாஸ் ஆகியோருடன் ஏழு நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஜ -117)

## விபத்தில் சிறுவன் காயம்

யாழ்ப்பாணம்,பெப்.28

கோப்பாய்ப் பகுதியில் திங்கட்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் சிறுவன் ஒருவன் காயமடைந்தான்.

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த நாகராசா விஜிகரன் (வயது-13) என்ற சிறுவனே காயங்களுடன் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-ரி)

# மந்திகை ஆஸ்பத்திரி வளவில் ஆங்காங்கே கற்குவியல்கள்!

தென்மராட்சி,பெப்.28

மந்திகை ஆஸ்பத்திரி வளவில் பல இடங்களில் கற்குவியல்கள் காணப்படுகின்றன. ஆஸ்பத்திரியில் உள்ள வாா்ட் கட்டடங்கள் திருத்த வேலைகள் நடைபெற்று முடிந்த போதிலும் பல இடங்களில் இன்னும் கற்கள் அகற்றப்படாமல் காணப்படுகின்றன. அத்துடன் வாா்ட்டுகளில் பின் புறங்களில் புல், பூண்டுகள் வளர்ந்துள்ளதால் சுகாதாரமும் பாதிக்கின்றது. சுகாதாரத்தைப் பேணவேண்டிய ஆஸ்பத்திரியிலேயே இந்நிலைமை காணப்படுவதால் பார்வையாளர்கள் முகம் சுழிக்கின்றனர். அத்துடன் ஆஸ்பத்திரி கழிப்பிடங்களின் துர்நாற்றம் வார்ட்டுகளுக்குச் செல்வோரை முகத்தைப் பொத்திப் பிடிக்க வைக்கிறது.

இந்த ஆஸ்பத்திரியில் நூற்றுக்கு மேற்பட்ட ஆண், பெண் சிற்றூழியர்கள் கடமையாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-117)

# ஜப்பான் செல்லும்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றொரு மாணவிக்கு வாய்ப்பளிக்கப்பட்டதாகத் தெரிவித்து, மீண்டும் மீண்டும் செய்திகள் வெளியிடப்படுவது தொடர்பாக, உண்மைநிலையை அந்த அதிகாரி தெளிவுபடுத்தினார்.

கொழும்பு இசுறுபாயவில் கல்வி அமைச்சின் பாடசாலை செயற்பாட்டுப்பிரிவு (School Activity Branch) இந்தக் கல்விச் சுற்றுலா விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ளது. அதன் பொறுப்பதிகாரியான உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி குமாரி இவ்விடயம் குறித்துத் தெரிவித்ததாவது-

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் முன்னணி நிலை பெறும் எட்டு மாணவர்களுக்கு இச்சுற்றுலா வாய்ப்பை ஜப்பான் அரசு ஒவ்வொரு வருடமும் வழங்குகின்றது. இச்சுற்றுலா வாய்ப்பைப் பெறும் மாணவர்களை எப்படித் தெரிவுசெய்வது என்பது பற்றிய வரையறை விதிமுறைகளை (Guide Lines) ஜப்பானே வழங்கியுள்ளது. அதன்படியே மாணவர்கள் வருடந்தோறும் தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

அந்த விதிமுறைகளின்படி -

✪ விகிதாசார முறைப்படி ஐந்து சிங்கள மாணவர்களும், ஓர் இலங்கைத் தமிழரும், ஓர் இந்தியத் தமிழரும், ஒரு முஸ்லிமும் என எட்டுப் பேர் தெரிவுசெய்யப்படுவர்.

✪ தெரிவுசெய்யப்படுபவர்களில் நால்வர் ஆண்களாகவும், நால்வர் பெண்களாகவும் கட்டாயம் இருக்க வேண்டும்.

✪ தெரிவுசெய்யப்படும் அனைவரும் - இவ்வருடக் கணக்குப்படி - 01.09.1989ஆம் திகதிக்கும் 31.08.1990 ஆம் திகதிக்கும் இடையில் பிறந்தவர்களாக இருக்கவேண்டும்.

- இந்த மூன்று விதிமுறைகளின்படி முதலில் புள்ளிகள் கூடிய ஐவர் தெரிவுசெய்யப்பட்டனர்.

அவர்கள் ஐவரும் சிங்கள மாணவர்கள். அவர்களில் நால்வர் ஆண்கள், ஒருவர் பெண்.

எனவே எஞ்சிய மூன்று இடங்களுக்கும் (இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம்) மூன்று மாணவிகளையே தெரிவுசெய்யவேண்டிய நிலை ஏற்பட்டது.

முதல் ஐந்து சிங்கள மாணவர்களுக்கும் முதல் இலங்கைத் தமிழ் மாணவனுக்குமிடையில் அதிக புள்ளிகளைப் பெற்ற பதினேழு சிங்கள மாணவர்கள் இருந்தும் கூட, இன விகிதாசார விதிமுறைப்படி தெரிவு செய்யவேண்டியிருந்ததால் அந்தச் சிங்கள மாணவர்கள் அனைவரையும் விட்டுவிட்டு, அடுத்ததாக இலங்கைத் தமிழர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டி ஏற்பட்டது.

அதுபோலவே இலங்கைத் தமிழரில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவன் இருந்தபோதிலும் - விதிமுறைப்படி எஞ்சிய மூவரும் மாணவிகளாகவே இருக்கவேண்டியிருந்ததால் - இலங்கைத் தமிழரில் அதிக புள்ளிபெற்ற மாணவியைத் தேர்ந்தெடுத்தோம்.

மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் பெற்றோரின் நிலையோ வருமானமோ கணக்கில் எடுக்கப்படவில்லை; விதிமுறைகளுக்கு மாறாக பாரபட்சம் ஏதும் காட்டப்படவுமில்லை.

- இப்படி விளக்கமளித்தார் அந்த அதிகாரி.

இதேபோன்று -

1995ஆம் ஆண்டிலும் - அப்போது நெடுந்தீவிலிருந்து 5ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி யாழ்.மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற டாக்டர்களான திரு.திருமதி வை.யோகேஸ்வரன் தம்பதிகளின் புதல்வி இருக்கத்தக்கதாக அந்த மாணவியைவிட குறைந்த புள்ளி பெற்ற - வவுனியாவைச் சேர்ந்த - தமிழ் மாணவன் ஒருவனுக்கு இந்தச் சுற்றுலா வாய்ப்பு அளிக்கப்பட்டது.

அப்போதும் இத்தகைய சர்ச்சை எழுப்பப்பட்டது. சம்பந்தப்பட்ட மாணவியின் பெற்றோர் கல்வி, உயர்கல்வி அமைச்சுடன் தொடர்புகொண்டு, உரிய விளக்கத்தைப் பெற்றுக்கொண்டனர்.

"உரிய அதிகாரிகளோடு நேரத்துடனேயே தொடர்புகொண்டிருந்திருந்தால் சரியான விளக்கத்தைப் பெற்றிருக்கலாம்; தேவையற்ற சர்ச்சைகளை நீடித்திருக்கத் தேவையில்லை."

- என்று விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. (உ-3)

## தாதியர்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்.சிவாஜினி (முள்ளியவளை), ஆர்.வானதி (அலம்பில்), கே.கல்யாணி(முள்ளியவளை).

### மன்னார் மாவட்டம்

எம்.ஏ.ரி.குருஸ் (வங்காலை), கே.ஆர்.எம்.வதனன் (பணங்கட்டிக் கொட்டில் மேற்கு), ஆர்.லக்ஸி (ஆதார வைத்தியசாலை), கே.யாழினி (சாவற கட்டு), ஜே.தட்சாயினி (எமில் நகர்).

### வவுனியா மாவட்டம்

கே.பிரேமநாத்(மகாரம்பைக்குளம், வவுனியா), எஸ்.செல்வரூபி (வைரவ புளியங்குளம்), எஸ்.சாந்தினி (ஆசிக் குளம்), எஸ்.கிறிசாந்தகுமாரி(நெலுக் குளம்), எம்.செந்துஸா(வைரவப் புளியங்குளம்).

### கிளிநொச்சி மாவட்டம்

ரி.குணேஸ்வரன்(அக்கராயன் குளம), எம்.கிருஷ்ணபவானி(பரந்தன்), வி.காயத்திரி(உருத்திரபுரம் வடக்கு), எம்.அணிசலா(பூநகரி), ஆர்.உதயாசினி(திருநகர்), என்.மஞ்சுளா(மாவட்ட மருத்துவமனை, கிளிநொச்சி). (ம-15)


பிரதாபன் ஞாபகார்த்தமாக

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம்

நடத்தும் மாபெரும்

மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டி - 2001

7 வீரர்கள் பங்குகொள்ளும் 12 பந்து பரிமாற்றங்களை கொண்ட சுற்றுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

* வர்த்தக திணைக்களம், மானிப்பாய்.
* கபிலா காலணியகம், யாழ்ப்பாணம்.
* யாழ். கல்வி நிலையம், ஆறுகால்மடம்

விண்ணப்ப முடிவு திகதி:- 05.03.2001
விண்ணப்பக் கட்டணம் :- 100/=

அணி ஒழுங்கு 09.03.2001 பி.ப.3 மணிக்கு செல்லமுத்து மைதானத்தில் இடம்பெறும்.

பா.ஜெயரூபன்
கழகச் செயலாளர்

(84731)



"முயற்சி"

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்
திறன் விருத்தி மையம்

புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான

விண்ணப்பம் கோரல்

கீழே குறிப்பிடப்படும் பயிற்சி நெறிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பயிற்சி நெறி | கல்வித் தகைமை |
|---|---|
| 01. வயறிங் றீவைண்டிங் (கிழமை நாள் வகுப்புகள்) | க.பொ.த. (சா.த.) சித்தி |
| 02. ரீ.வீ.,றேடியோ திருத்துதல் (கிழமை நாள் வகுப்புகள்) | க.பொ.த. (சா.த.) சித்தி |
| 03. தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்து (கிழமை நாள் வகுப்புகள்) | க.பொ.த. (சா.த.) சித்தி தமிழ் திறமைச் சித்தி |
| 04. உடையமைத்தலும் துணியில் வர்ணம் தீட்டுதலும் (கிழமை நாள் வகுப்புகள்) | க.பொ.த. (சா.த.) வரை கல்வி கற்றிருத்தல் (பெண்களுக்கு மட்டும்) |
| 05. தையல் இயந்திரம் திருத்துதல் (வார இறுதி நாள் வகுப்புகள்) | க.பொ.த. (சா.த.) வரை கல்வி கற்றிருத்தல் (பெண்களுக்கு மட்டும்) |
| 06. தமிழ் தட்டச்சு (வார இறுதி நாள் வகுப்புகள்) | க.பொ.த (சா.த.) சித்தி தமிழ் திறமைச் சித்தி |
| 07. ஆங்கில தட்டச்சு (வார இறுதி நாள் வகுப்புகள்) | க.பொ.த (சா.த.) சித்தி ஆங்கிலம் திறமைச் சித்தி |
| 08. புத்தகம் கட்டுதல் (வார இறுதி நாள் வகுப்புக்கள்) | க.பொ.த (சா.த.) வரை கல்வி கற்றிருத்தல் |
| 09. மனையியல் சம்பந்தமான செயற்பாடுகள் (வார இறுதி நாள் வகுப்புகள்) | க.பொ.த (சா.த.) வரை கல்வி கற்றிருத்தல் (பெண்களுக்கு மட்டும்) |

மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறிகளில் 03,04ஆம் பயிற்சி நெறிகள் எமது தலைமை அலுவலகமான 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திலும் மானிப்பாய் வீதி, உரும்பிராயில் அமைந்துள்ள அதன் கிளை நிறுவனத்திலும் ஆரம்பமாகவுள்ளன. மிகுதிப் பயிற்சி நெறிகள் 4ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் உள்ள தலைமையலுவலகத்தில் ஆரம்பிக்கப்படும்.

பயிற்சி நெறிகளுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.

※ *விண்ணப்ப முடிவுதிகதி 07.03.2001வரை நீடிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் யாவும் செயலாளர் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் என்ற முகவரியிட்டு அனுப்பப்படவேண்டும்.*

106, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்

-நிர்வாகம்.

(C/15494)



க.பொ.த (உயர்தர) உயிரியல் பாட மாணவர்களுக்கான வெளியீடு

"மனிதனும் சூழலும்"

MAN AND ENVIRONMENT

சகல பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.
விலை ரூ 100/-

By: Mrs MALINI SENTHILMANI B.Sc.

(84730)



அச்சகம் வைத்திருக்கும் அனைவரும்

"ஸ்கிறீன் பிரிண்டிங்"

கற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்பு: S.S.யசோதரன் ஆட்ஸ்

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(வின்சர் தியேட்டர் முன்பாக)

பயிற்சிக் கட்டணம் ரூபா 2000 மட்டுமே!

உங்களால் ஸ்கிறீன் பிரிண்டிங் செய்ய முடியாது போனால் பயிற்சிக் கட்டணம் திருப்பி வழங்கப்படும்.

பயிற்சி வகுப்புகள் 02.03.2001 மாலை 5 மணிக்கு ஆரம்பமாகும்.

ஸ்கிறீன் பிரிண்டிங்கிற்கு தேவையான இரசாயனப் பொருள்கள், உபகரணங்கள் என்பன கொழும்பிலிருந்து எம்மால் தருவித்து வழங்கப்படும்.

5000 ரூபா முதலில் நீங்களும் முதலாளியாகலாம்.

(84725)



5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை - 2001

யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை,
யா/போக்கட்டி அ.த.க. பாடசாலை

ஆகிய பாடசாலைகளிற் பயின்று தற்பொழுது இடம் பெயர்ந்து தற்காலிகமாக வேறு பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் 5 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சை 2001 இற்கு விண்ணப்பம் நிரப்ப வேண்டியுள்ளது.

ஆகவே மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் பெற்றோர்களது ஆண்டு வருமானம் ரூ 6000/- இலும் குறைவானதாயின் தங்கள் பகுதிக் கிராமசேவை அலுவலரின் அத்தாட்சிக் கடிதத்தைப் பெற்று எதிர்வரும் (02.03.2001) வெள்ளிக்கிழமைக்கு முன்னர் இப்பாடசாலைகள் தற்காலிகமாக இயங்கும் அல்வாய் சதா பொன்ஸ் கல்வி நிலையத்திற்கு பி.ப.2மணிக்கு முன் வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- பாடசாலைகளின் அதிபர்கள்
யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை,
யா/போக்கட்டி அ.த.க.பாடசாலை.

(84716)



கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிப் பணியாளரும் அங்கத்தவருமாகிய

திரு.மு. அல்பிரட் அவர்களின் அன்புத் தாயாரான

திருமதி முடியப்பு வியாகுலம்

அவர்கள் மரணமடைந்த செய்தி கேட்டு நாம் துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்கள், அங்கத்தவர்கள்
வலிகாமம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,
மானிப்பாய்

(C/15492)



மரண அறிவித்தல்

திருமதி யோகாம்பிகை இராமநாதன்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகாம்பிகை இராமநாதன் 24-02-2001 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் K.S.இராமநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி இராஜரத்தினத்தின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கந்தையா - சிவப்பிரகாசத்தின் அன்பு மருமகளும், சுபத்திரா (யாழ்/கொட்டடி நமசிவாய வித்தியாசாலை), குணாளன் (இந்தியா), தயாளன் (கணக்காளர்-கனடா), அனுசியா (இத்தாலி), சியாமளா (சர்வோதயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி மீனாம்பாள் தயாளன் (கனடா), ரவீந்திரன் (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான குணரத்தினம், கமலாம்பிகை மற்றும் Dr.அரியரத்தினம், இரத்தினாம்பிகை ஆகியோரின் சகோதரியும், வித்தியசாகர் (கனடா), சரத்சாகர்(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-02-2001) புதன்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

முகவரி:
*86, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.*

தகவல்:-
மகன்:இ.தயாளன் (கணக்காளர், கனடா)
மகள்மார்: இ.சுபத்திரா (யாழ்-கொட்டடி நமசிவாய வித்தியாசாலை)
இ.சியாமளா (சர்வோதயம்)

(84732)

## பிரிட்டன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவை இல்லை.

கடந்த 19 ஆம் திகதி நாடாளு மன்றம் கூடிய சமயம், சம்பந்தப்பட்ட பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் அன்று முதல் நடைமுறைக்கு வருவது பற்றிய அறிவிப்பை மட்டும் உள்துறை அமைச்சர் ஜக் ஸ்ட்ரோ நாடாளு மன்றத்தில் வெளியிட்டார்.

அந்தச் சட்டத்தின் கீழ் தான் தடைசெய்யவிருக்கும் பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியல் குறித்து அவர் நாடாளுமன்றத்தில் மூச்சு ஏதும் விடவில்லை.

இந்நிலையில் பிரிட்டன் நாடாளு மன்றம் மீண்டும் இன்று கூடுகின்றது.

பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலையோ அல்லது அத்தகைய பட்டியல் ஒன்றைத் தாம் வெளியிடப் போவது பற்றிய அறிவிப்பையோ இன்று அல்லது நாளை உள்துறை அமைச்சர் ஜக் ஸ்ட்ரோ பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ)

## பொங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். பேரணி வட்டக்கச்சிப் பிரதேசச் செயலகத்தில் சென்று முடிவுற்றதும் அங்கு பொதுக்கூட்டம் இடம்பெற்றது.

விடுதலைச் சுடரேற்றல், கொடியேற்றல் ஆகியவற்றோடு உரைகளும் இடம்பெற்றன.

வெகுசன அமைப்புகளின் தலைவர் இ.சாம்பசிவம் தலைமையில் இந்த வைபவம் நடைபெற்றது. விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமார் உட்பட மத குருமாரும் முக்கியஸ்தர்களும் இங்கு உரையாற்றினர்.

கூட்டத்தின் முடிவில் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்முக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்று கரைச்சி கிழக்கு வெகுசன ஒன்றியத்தால் அனுப்பிவைக்கப்பட்டது.

(உ-10)

## விரைவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் இடம்பெற்ற இந்த மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த பல வருடங்களில் விமானப் படையினர் தமது போர் நடவடிக்கைகளிலும் உளவு நடவடிக்கைகளிலும் பல வெற்றிகளை ஈட்டியுள்ளனர். அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் விமானப்படையின் தரத்தை எட்டிப்பிடிக்கும் நிலைக்கு நாம் வந்துள்ளோம்.

83ஆம் ஆண்டு முதல் பல போர் நடவடிக்கைகளில் கடற்படை, தரைப்படையுடன் இணைந்து பல வெற்றிகளையும் தோல்விகளையும் சந்தித்துள்ளோம். தோல்விகளைக் கண்டு நாம் துவளவில்லை. போதிய விமானங்களைக் கொள்வனவு செய்து சேவையை விரிவாக்கி வருகின்றோம்.

இன்னும் சில மாதங்களில் நவீன விமானங்களையும் ஆயுத உபகரணங்களையும் விமானப்படை பெற உள்ளது - என்றார்.

(உ-3)



திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் யாழ்.பொலீஸாரினால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து மீட்கப்பட்ட பொருள்கள் பொலீஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படங்கள். மீட்கப்பட்ட பொருள்களில் ஒரு பகுதியை மேற்படத்திலும் இது விடயத்தில் புலன்விசாரணை நடத்திய யாழ்.பொலீஸ் நிலைய தலைமையக சிரேஷ்ட இன்ஸ்பெக்டர் டபிள்யூ.உமகிலிய மற்றும் பொலீஸ் அதிகாரிகள் மீட்கப்பட்ட பொருள்களின் முன்னால் நிற்பதைக் கீழ்க் காணலாம். *(படங்கள் : கொனிகா கலர் லாப்)*

# திருட்டுப் பொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம்,பெப்.28

குடாநாட்டில் பல்வேறு இடங்களில் இடம் பெற்ற திருட்டுச் சம்பவங்களில திருடப்பட்ட பெறுமதி வாய்ந்த பல பொருள்களை யாழ்.பொலீஸார் மீட்டுள்ளனர்.

மூன்று தொலைக்காட்சிப் பெட்டிகள், இரண்டு டெக்குகள், 4 கசெட் றேடியோக்கள், இரண்டு லுமாலா சைக்கிளகள் உட்பட பல பொருள்களைப் பொலீஸார் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட பொருள்களின் பெறுமதி சுமார் இரண்டரை லட்சம் ரூபா என யாழ்.பொலீஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்

மீட்கப்பட்ட பொருள்கள் தற்போது யாழ்.பொலீஸ் நிலையத்தில் வைக்கப் பட்டுள்ளன.

(உ-3-6-ரி)

## படுகொலை செய்யப்பட்ட

# சாரதாம்பாளின் தந்தைய அனலைதீவில் தற்கொலை

யாழ்ப்பாணம்,பெப்.28

புங்குடுதீவில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டதாகக் கருதப்படும் அந்தணப் பெண்ணான சாரதாம்பாளின் தந்தை நேற்று முன்தினம் தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகின்றது.

அனலைதீவு வடக்கு அம்மன் கோயிலில் அர்ச்சகராகப் பணிபுரிந்து வந்த - சாரதாம்பாளின் தந்தையாரான - சந்திரசேகரக்குருக்களே தற்கொலை செய்து கொண்டவராவார்.

இவர் தற்கொலை செய்து கொண்டமைக்கான காரணங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை.

களுத்துறைச் சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த இரு வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த அவரது மற்றொரு மகனான நகுலே[...] சர்மா யாழ்.நீதிமன்றத்தில் [...] செய்யப்படுவதற்காக கடந்[...] யாழ்ப்பாணத்துக்கு அழைத்[...] பட்டிருந்தார்.

யாழ்.நீதிமன்றில் ஆஜர் செ[...] படுவதற்காக அவர் நேற்று அ[...] துவரப்பட்ட சமயம் அவரது த[...] யார் இறந்த தகவல் அங்கு தெ[...] கப்பட்டது.

இது விடயம் யாழ்.நீதிவா[...] கவனத்துக்குக் கொண்டு வ[...] டதை அடுத்து, அவரது உத்[...] பேரில் பிரஸ்தாப நபரை யாழ்[...] சாலை அதிகாரிகள் பொலீ[...] உதவியுடன் அனலைதீவுக்கு[...] துச் சென்றனர்.

அங்கு தந்தையின் இறு[...] யைகளில் நகுலேஸ்வரசர்மா[...] பற்றினார்.

(உ[...]

# ஏழு பொலீஸாரும் கைதிய[...] ஜீப் தடம்புரண்டதில் காய[...]

## கோப்பாயில் நேற்றுச் சம்பவ[...]

யாழ்ப்பாணம்,பெப்.28

நீதிமன்றத்தால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட மூவரைக் கைது செய்து அவர்களை ஏற்றி வந்த பொலீஸ் ஜீப் தடம்புரண்டு உருண்டதில், ஏழு பொலீஸாரும் கைது செய்து கொண்டு வரப்பட்டவர்களில் ஒருவரும் காயமடைந்தனர்.

கோப்பாய் இராச பாதைச் சந்தியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் கோப்பாய் பொலீஸாரின் ஜீப்பே தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

நீதிமன்றத்துக்குச் சமுகம் தரத் தவறிய மூவர் தொடர்பாக நீதிமன்றம் விடுத்த பிடிவிறாந்து உத்தரவுப்படி நீர்வேலி அச்செழுப் பகுதியில் உள்ள மூவரை பிடித்து வரும் போதே, அதிவேகமாக வந்த ஜீப் வண்டி சந்தியில் திரும்ப முற்பட்ட[...] தடம்புரண்டது. அதில் இரு[...] தவர்களான கோப்பாய் பொலீ[...] யத்தைச் சேர்ந்த பெருமாள்[...] மார்(வயது 32), சுல்தான் மு[...] முகமது சபீர்(வயது 27)[...] டபிள்யூ.திசநாயக்கா(வயது [...] குணசிங்கா (வயது 39), [...] பிரணகம(வயது 33). டபிள்[...] வணசிங்க (வயது 32), எம்[...] கே.குலரட்ண(வயது 22) ஆ[...] ரும், பிடித்து வரப்பட்டவர்கள்[...] வரான அச்செழுவைச் சேர்[...] முகம் ராசன் (வயது 57) [...] ருமே காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் ய[...] பத்திரியில் அனுமதிக்கப்[...] னர்.

(உ[...]


மேகாஸ் வீடியோ

CDயிலிருந்து CDக்கு புதிய, பழைய பாடல்கள் பதிவு செய்து கொள்ளவும், CD யிலிருந்து கெசற்றுக்குப் பதிவு செய்து கொள்ளவும், நவீன வீடியோ கமரா மூலம் வீடியோப் படப்பிடிப்பு, உட்புற, வெளிப்புற படப்பிடிப்பு (PHOTO) மற்றும் மணப்பந்தல் சேவைகளுக்கும் நாடுங்கள்:

மேகாஸ் வீடியோ ஓடியோ மிக்சிங் ஸ்ரூடியோ

23, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(C/15433)

கணக்கீடு

A/L 2002

"பங்குடைமை"

பிரிவு I

சனி,ஞாயிறு 1.15p.m.

ஆரம்பம்:- 03.03.2K1

பிரிவு II

திங்கள்,செவ்வாய் 4.00p.m.

ஆரம்பம்: 05.03.2K1

BY:"யாழ்புகழ்" கலைச்செல்வன்

கலைக் கல்லூரி, யாழ்நகர்.

(மனோகராச் சந்தி அருகில்.)

(84664)

எமது புதிய FIVE STAR வீடியோ CD வெளியீடு

முதன் முதலாக வீடியோ CDயில்

SUPER REMIX -2001

(பழைய பாடலில் புதிய காட்சிகள்)

வீடியோ CD ஒன்றின் விலை – 350/-

வீடியோ விமல் யாழ்ப்பாணம்.

(C/15495)

சந்திபா மல்ரி கோட்பாட் அனுசரணையில்

எம் மண்ணின் அவலங்களை சித்தரிக்கும் தே.தேவானந்தின்,

உயிர் விசை

(நாடக ஆற்றுகை)

இடம்: கைலாசபதி கலையரங்கு யாழ்.பல்கலைக்கழகம்.

காலம்: 28-02-2001 புதன்கிழமை. மாலை 3.30 (புதிய நேரம்)

கைகொடுத்தல் :20/=.50/=

முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியம்.

கைகொடுத்தல் நிதி

NEW ...ANTHAA JEWELLERS 185,Kasthuriyar Road,Jaffna.

A/L 2001

கருத்தரங்கும் வினாப்பத்திர வகுப்பும்

ஆரம்பம்:- 03.03.2001

காலை ~ 7மணி

(பிரதி சனி,ஞாயிறு தோறும்)

கணக்கீடு D.SAM

DMI யாழ்நகர்.

(C/15457)

புதுப் பொலிவுடன்

MILLENNIUM AUDIO & VIDEO CENT[...]

82/6, KASTHURIAR ROAD, JAFFNA

❑ CDக்கள் மூலம் தரமான புதிய ,பழைய பக்திப் ப[...] களைப் பதிவுசெய்து கொள்ளவும்.

❑ CDக்கள் மூலம் திரைப்படங்களைப் பதிவு செ[...] கொள்ளவும்.

❑ போட்டோ பிரதிகளை உடனுக்குடன் பெற்றுக் கொ[...] ளவும்.

உடன் விரையுங்கள்

வீடியோ CD வெளியீடுகள்:

- GLAMOUR G GIRL JOTHIKA
- SWEET SIMRAN
- A TRIBUTE TO GOUNDAMANI & SENTHI[...]
- HITS OF A.R. RAHMAN

Vol - 01 --- Vol - 12

(847[...]


## மரண அறிவித்தல்

### மருதப்பு இரத்தினகோபாலபிள்ளை

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொ[...] மருதப்பு இரத்தினகோபாலபிள்ளை (செல்லக்குட்டி) நேற்றுக் காலமா[...]

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதப்பு - முத்துப்பிள்ளை தம்[...] களின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பூர[...] தம்பதிகளின் அன்பு மருமகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவ[...] உதயகுமார், உதயமதி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தை[...] சிவனேஸ்வரன், சசிகலா (கனடா), தனபாலசிங்கம், பேரின்பநாய[...] மனோன்மணி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பவள[...] காலஞ்சென்ற தபாலதிபர் நடராசா ஆகியோரின் அன்புச் சகோதர[...] காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்பிள்ளை, ஞானசுந்தரம் ம[...] மகேந்திரன், இராஜேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் மைத்[...] சுமங்கல்யா, பவித்திரா, மகிஷா, திலீப் (கனடா), தினோஜா ([...] ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை பிற்[...] 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கொக்குவில் [...] மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

தகவல்:
இ.மங்கையர்க்கரசி
(மனைவி)

*நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கு*

(C/15496)


## யாழ்நகர் பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோள்

கமல் என அழைக்கப்படும் A.ராஜேந்திரா என்னும் நபர் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை துஷ்பிரயோகம் செய்து பல மோசடிகளில் ஈடுபட்டமைக்கான விசாரணை தொடர்ந்துள்ளது.

இந்நபர் பொது அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்டமையால், பொது மக்கள் இவருடன் தொடர்பு கொள்ளவேண்டாம் என கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

-இணைச்செயலாளர்

(84829)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.02.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.